912

.. M. 1803. MAY 1928 Vol. V— No 10.

10 AUG 1929

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் — — — — — அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு; தினசரி துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முழ நீளம் 40'' அகலம்.

விலை ரூ. 6—8—0 தான்

கிடைக்கவில்லையே! என்று வருந்தவேண்டாம். ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

முத்தையாவ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம் காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1	டுயில் ஷர்ட் 1-க்கு விலை	ரூ. 2—0—0.
,, 2	காக்கி ஷர்ட் விலை	ரூ. 2—4—0.
,, 3	இங்கிலீஷ் டுயில் ஷர்ட்	ரூ. 2—4—0.
,, 4	அமெரிக்கன் டோரியா	ரூ. 2—4—0.
,, 5	உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ. 3—8—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

ஓம்

லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR
No.
10 AUG 1929
MADRAS

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி
பிரசுரிக்கப்படும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	விபவஸு வைகாசிமீ 1928 மேமீ	இதழ் 10.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 423
2.	பூச்சூடல்	... 424
3.	விவாக வயது மசோதா	... 425
4.	சிறுமணித்திரள்	... 429
5.	நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத்தலைவன்	... 434
6.	மதுசாரம்	... 440
7.	குங்குலியக் கலயநாயனார் சரிதை ...	... 445
8.	உருத்திர சூக்தம்	... 448
9.	தயையுள்ள மந்திரி	... 453
10.	வ. வெ. சு. ஐயர் விக்கிரமசிங் ஆனது	... 455

10379
சென்னை 600

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையிலிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்கும் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை 25-ந் தேதிக்குள் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும் லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி 99. சென்னை.

லக்ஷ்மி துதி

அருளும் பொருளு நின்றாட லென்
றோர்ந்து மகிலத்துள்ளே

யிருளுந்து பாழ் மிடிப் பேயால்
வருந்தற் கிரங்க லென்றோ

சுருளுங் கருங் குழற் றோகாய்
விண்ணாடர் தொழ முனிவர்

தெருளுந் திருநெடு மாலுரத்தே
வளர் செந்திருவே

SL
N23LA
A128.5-10.

பூச்சூடல்.

(1) ஆனிரை மேய்க்க நீபோதி
அருமருந் தாவ தறியாய்
கானக மெல்லாம் திரிந்து
உன்கரிய திருமேனி வாட
பானையில் பாலைப் பருகி
பற்றாதா ரெல்லாம் சிரிப்ப
தேனி லினிய பிரானே
செண்பகப் பூச்சூட வாராய் !

(2) மச்சொடு மாளிகை யேறி
மாதர்கள் தம்மிடம் புக்கு
கச்சொடு பட்டைக் கிழித்து
காம்பு துகிலவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்
நீள்திரு வேங்கடத் தெந்தாய்
பச்சை தமனகத் தோடு
பாதிரிப் பூச்சூட வாராய்!

(3) குடங்க ளெடுத்தேற விட்டு
கூத்தாட வல்ல எங்கோவே
மடங்கொள் மதிமுகத் தாரை
மால்செய்ய வல்ல என்மைந்தா
இடந்திட்டு இரணியன் நெஞ்சை
இருபிள வாகமுன் கீண்டாய்
குடந்தைக் கிடந்தஎம் கோவே
குருக்கத்திப் பூச்சூட வாராய்

(4) அண்டத் தமரர்கள் சூழ
அத்தாணி யுள்ளங் கிருந்தாய்
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்
தூமல ராள் மணவாளா !
உரைபட்டு உலகினை ஏழும்
ஓரா லிலையில் துயில்கொண்டாய்
கண்டுநான் உன்னை உகக்க
கருமுகைப் பூச்சூட வாராய் !

(பெரியாழ்வார்)

விவாக வயது மசோதா

(ஆசிரியர்.)

இடைக்காலத்துத் தோன்றி, இந்தியாவைச் சீரழித்துவரும் பால்ய விவாக வழக்கத்தை ஒழிக்கும்பொருட்டு, இந்திய சட்ட சபையில் ஸ்ரீமான் ஹரிவிலாஸ் சாரதா கொண்டு வந்த மசோதா "செலக்டு கமிட்டி" ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருந்ததை நேயர்கள் அறிந்திருக்கலாம். 15-பிரதிநிதிகள் அடங்கிய அந்த "செலக்டு கமிட்டியார்" அனுப்பிய ரிப்போர்ட்டு இந்திய சர்க்கார் கெஜட்டில் வெளி வந்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டில் ஆண் பிள்ளைகள் 18-வது வயதிலும், பெண்கள் 14-வது வயதிலும் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு எதிராக நடப்பவர்களுக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

இம் மசோதாவுக்கு அநுகூலமாகவும், பிரதிகூலமாகவும் நாடெங்கும் கிளர்ச்சி நடந்து வருவதும் யாவரும் அறிந்த விஷயமே. விவாகம் மத சம்பந்தமான சடங்கென்றும், ஆகவே சர்க்கார் மத விஷயங்களில் பிரவேசித்து சட்ட மியற்றுவது முறையல்ல வென்றும் பிரதிகூல கட்சியார் கூறுகின்றனர்.

இந்தியாவில், சமுதாயச் சீர்திருத்த விஷயமாக முயற்சிகள் செய்யப்படும் பொழுதெல்லாம் "மதம் போச்சு, சாஸ்திரம் போச்சு, வேதம் போச்சு, ஆசாரம் போச்சு" என்று வைதீகர்கள் கூக்குரலிடுவது சர்வ சாதாரணமாய் விட்டது. உடன் கட்டை யேறும் கொடிய வழக்கத்தை ஒழிக்க சர்க்கார் சட்ட மியற்றிய காலத்தும் வைதீகர்கள் இவ்வாறுதான் கூக்குரலிட்டனர். சமீபகாலத்தில் சென்னைச் சட்டசபையில் நிறைவேறிய அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை ஒழிப்பதற்கு மடாதிபதிகளும், வைதீகர்களும் செய்த ஆர்ப்பாட்டங்களையும், சூழ்ச்சிகளையும் நாம் மறந்துவிடவில்லை. அறநிலையப் பாதுகாப்பு மசோதா அமுலுக்கு வந்து இப்பொழுது சுமார் 2 வருஷங்கள் ஆய்விட்டன. ஹிந்து மதத்துக்கோ, கடவுளுக்கோ, ஆசாரங்களுக்கோ எத்தகைய இடையூறுகளும் ஏற்பட்டு விடவில்லை. மாமூல்படி

ஆலயங்களில் நடைபெறும் பூஜைகளை மூர்த்திகள் ஏற்றுக் கொண்டுதான் வருகிறார்கள்; ஆலய தருமச் சாப்பாட்டை யுண்ணும் பிராமணர்களுக்கு அஜீரணம் ஏற்பட்டதாகவும் கேட்கப் படவில்லை. ஆகவே "மதம் போச்சு, சாஸ்திரம் போச்சு" என்று வைதீகர்கள் போட்ட கூச்சல்கள் எல்லாம் சுயநலம் பற்றி யெழுந்த வீண்கூச்சல் என்பது வெளியாகவில்லையா ? இப்பொழுதும் விவாக வயது மசோதாவைப்பற்றி, பிரதிகூல கட்சியார் போடும் கூச்சலும் வீண் கூச்சலேயாகும். எனினும் அவர்கள் கூறும் ஆட்சேபம் சரியா தப்பா என்று ஆராய்ந்து பார்ப்போமாக!

"8 வயதுடையவள் கன்னிகை; 9 வயதுடையவள் ரோகிணி; 10 வயதுடையவள் கௌரி; அதற்கு மேற்பட்ட வயதுடையவள் ரஜஸ்வலை(ப்ரௌடை), 10வயதுக்கு மேற்பட்ட ரஜஸ்வலை என்ற ப்ரௌடா ஸ்திரீ, தகப்பன் கிருகத்தில் கலியாணமாகாம லிருப்பாளேயானால், பிராஹ்மண ஜாதியிலுதித்த பெருமை போய் 'வ்ருஷனி' என்ற இதர ஜாதிப் பெண் ஆகிறாள். அவளை விவாஹம் செய்துகொள்ளும் புருஷனும் "வ்ருஷனி"யின் பதியானதால் அவன் சிராத்தாதி ஸத் காரியங்களுக்கு அர்ஹனாகாமல் போகிறான்." என்று நாச்சியார் கோவில் வித்வான் அபிநவ சரஸ்வதி குருவர்ய நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாச்சாரியார் கூறுகிறார்.

ஆனால் பிராமணர்களுக்குள்ளே 10-வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இப்பொழுது சாதாரணமாக விவாஹம் நடந்து வருகின்றது. அந்தப் பெண்ணோ, புருஷனோ, அல்லது தம்பதிகளின் பெற்றோர்களோ, இக் காரணத்தால் ஜாதிப்ருஷ்டராய் விட்டதாக ஒருவரும் நினைப்பதுமில்லை; அவர்களும் ஏனைய பிராமணர்களைப்போல் உயர்ந்த ஜாதியாராகவே மதிக்கப்பட்டு வருகிறார்கள். சட்டத்தால் கட்டுப்படுத்தப்படாமல் தாமாகவே வேத விதிக்கு மாறாக நடக்கும் பிராமணர்களுக்கு ஜாதிப்ருஷ்டம் ஏற்படாமலும், மதத்துக்கும் ஆசாரங்களுக்கும் ஹானியுண்டாகாமலும் இருக்கையில், விவாக வயது மசோதா நிறைவேறி விட்டால் எல்லாம் நாசமாய் விடும் என்று கூக்குரலிடுவதில் ஏதாவது அர்த்தமுண்டா?

ஸ்வாமி கிருஷ்ணமாச்சாரியார் 'ரஜஸ்வலை' விவாகம் சாஸ்திர விரோதமான தென்று கூறுகையில், அது சாஸ்திரோக்தமான தென்று கூறுவாரும் இல்லாதில்லை.

பர்லாக்கிமிடி தர்மசாஸ்திர பிரசாரக மண்டலியின் காரிய தரிசியும் முதல் கிரேடு பிளீடருமான ஸ்ரீமான் சத்திய நாராயணமூர்த்தி (எம். ஏ.) ஹிந்து விவாகத்தைப்பற்றி நீண்டதொரு வியாக்கியானத்தைத் தயாரித்து அச்சிட்டு, சர்க்காருக்கும், சட்ட சபை மெம்பர்களுக்கும், பண்டிதர்களுக்கும், பொதுஜனங்களுக்கும் அனுப்பியிருக்கிறார். அவர் அவ் வறிக்கையில் கூறுவதாவது:—

"சாஸ்திரங்கள் ருதுமதி விவாகத்தைக் கண்டிப்பதாகவும், ருதுவான கன்னிகையை ஜாதிப்ருஷ்டம் செய்யவேண்டுமென்றும் பொது ஜனங்களுக்குள் ஒருவித நம்பிக்கை இருந்துவருகிறது. ஆனால் ருதுவான பின்பும் ஒரு பெண் கன்னியா யிருக்கலாமென்று காட்ட ஆதாரமிருக்கிறது. மகாபாரதத்தில் "கன்னி என்றால் ருதுவான பின் ஸம்ஸர்க்கம் செய்யாத பெண் என்று அர்த்தம்" என்று காட்டப்பட்டிருக்கிறது. இது கன்னி என்ற பதத்தின் மூல பதத்தின் கருத்துக்கு ஏற்றதாக இருக்கிறது. 'கென்' என்ற வார்த்தையிலிருந்தே 'கன்யா' என்ற பதம் வந்தது. கன்யா என்றால் தனது காதலனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் பரிபூரண சுதந்தரமுள்ளவள் என்று அர்த்தம். பதஞ்சலியின் மகா பாஷ்யத்தில் விவாகமாகுமுன்பு புருஷனைக் கலந்த பெண்ணை கன்னியென்று அழைக்க முடியாதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவாக சம்பந்தமான விதிகளில், கலியாணத்தின் 4-ம் நாள் ராத்திரியில் சமாவேஸனம் என்ற ஒரு சடங்கு நடக்கிறது. சமாவேஸனம் என்றால் கலக்கும் நோக்கத்துடன் படுத்திருத்தல் என்று பொருள். இதனால் ருதுவான பின் விவாகம் நடத்துவதை சாஸ்திரங்கள் ஆதரிக்கவில்லை என்று கூறமுடியாது. தற்பொழுதுள்ள விவாகச் சடங்குகளில் பெயரளவில் தான் சமாவேஸனம் நடக்கின்றது. கணவனுடன் கலக்காவிட்டால் பெண்ணுக்கு கன்யா நிவர்த்தி ஏற்படாது; கல்யாணப் பெண்ணும் 'பார்யாள்' ஆகமாட்டாள். அதாவது கணவனது சுக்கிலத்தைத் தாங்கியவளாகமாட்டாள். தற்பொழுது நடக்கும் விவாகங்களில் பெரும்பான்மையானவை ஏற்றுக்கொள்ளத் தகுந்தனவல்ல. ஏனெனில் விவாக உத்தேச உரிமையை உபயோகிக்க முடியாதபடி வதூவரர் அவ்வளவு இளம்பிராயம் வாய்ந்தவர்களா யிருக்கிறார்கள். இதனால் சாஸ்திரப்படி அபிசந்தியும், சம்பிரயோகமும் சாத்தியமாக இருக்கின்றபொழுது தான் விவாகம் செய்ய வேண்டுமென்று ஏற்படுகிறது."

அநுகூல கட்சியாரும், பிரதிகூல கட்சியாரும் தத்தம் வாதங்களுக்கு சாஸ்திர ஆதாரம் காட்டத்தான் செய்கிறார்கள். ஆகவே, கடவுள் தந்த பகுத்தறிவினால் இவ்விஷயத்தை ஆராய்ந்து முடிவு செய்தலே உத்தம வழி. பெண்கள் 14 வயதிலும், ஆண்கள் 18 வயதிலும் விவாகம் செய்துகொள்வதால் ஆசாரத்துக்கோ, மதத்துக்கோ, தம்பதிகளுக்கோ எத்தகைய ஆபத்தும் உண்டாகாதென்பதே நமது தாழ்மையான அபிப்பிராயம்.

துணுக்குகள்.

இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் போகும் வழி நெடுக மாத்திரம் கடலில் 8 கோடி சவரன் பொன் பெறுமானமுள்ள தங்கமும் நகைகளும் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

* * *

தேசியக் கொடிகளில் பழைமையான கொடியை உடைய தேசம் டென்மார்க்கேயாகும். அவர்கள் அக்கொடியை 1219ம் வருஷத்திலிருந்து உபயோகித்து வருகிறார்கள்.

* * *

தென்னாப்பிரிக்காவிலுள்ள ஓர் ஆப்பிரிக்க வகுப்பாரில் எவரேனும் ஒருவர் இறந்தால் அவர் ஏதேனும் ஒரு நற்செயலேனும் புரிந்துள்ளாரா என்பதைத் தெரிந்துகொண்ட பின்பே, அவர் உடலை அடக்கஞ் செய்வார்களாம்.

* * *

உலக முழுமையும் கணக்கெடுத்தால் சுமார் 50 லட்சம் ஏக்கர் பூமி தென்னந் தோட்டங்கள் இருக்கின்றனவாம். இந்தியாவில் சுமார் 7 லட்சம் ஏக்கர் பூமி தென்னைப் பயிராகிறது. இலங்கைத் தீவில் 10 லட்சம் ஏக்கர் பூமி பிரேசில் தேசத்தில் சுமார் 10 லட்சம் ஏக்கர் பூமி பிலிப்பைன் தீவு, மேற்கிந்தியத் தீவு, மலாய் நாடு, ஆபிரிக்காவில் மடகாஸ்தர் தீவு முதலிய நாடுகளெல்லாம் சேர்ந்து சுமார் 20 லட்சம் ஏக்கர்.

* * *

மெக்ஸிகோவில் விஷமில்லாத ஒருவகை பாம்புகளிருக்கின்றன. நாம் எலிகளைப் பிடிப்பதற்காக பூனைகளை எவ்விதம் வளர்க்கிறோமோ அதே போல அங்குள்ளவர்கள் சுண்டெலியைப் பிடிப்பதற்காக அப்பாம்புகளை வளர்க்கிறார்கள்.

சிறு மணித் திரள்

(மயிலை. சீனி. வேங்கடசாமி எழுதியது)

Rice—ரைஸ்=அரிசி. ரைஸ் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு அரிசி என்பது தமிழ்ப் பொருளாகும். ஆனால், இந்த ரைஸ் என்னும் ஆங்கிலச் சொல் அரிசி என்னும் தமிழ்ப் பதத்திலிருந்து உண்டானதுதான். பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நமது நாட்டிலிருந்து (முக்கியமாய் தென் இந்தியாவிலிருந்து) அரிசி, இஞ்சி வேர் (இஞ்சி) துணி முதலிய பொருள்களும் சந்தனக் கட்டை ஏலக்காய் முதலிய வாசனைப் பொருள்களும் ஐரோப்பா கண்டத்திற்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. அக்காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் யவனர்கள் (கிரேக்கர், ரோமர்) செல்வமும் செல்வாக்குமுடையவராய் விளங்கியதோடு இந்தியாவுடன் கப்பல் மூலமாக வியாபாரமும் நடத்தி வந்தார்கள். அவ்வூரில் கிடைக்காத பொருள்கள் இவ்விடத்திலிருந்து கொண்டுபோகப்பட்டன. இவ்விடத்தில் கிடைக்காத பொருள்கள் அவ்விடத்திலிருந்து கொண்டுவரப்பட்டன. ஐரோப்பியருக்கு அரிசி நூதனமான பொருள். ஆகவே அரிசிக்கு அவர்கள் பாஷையில் பெயர் கிடையாது. அவர்கள் அரிசி என்னும் தமிழ்ப் பெயரையே வழங்கினார்கள். ஆனால், அரிசி என்னும் சொல்லைச் சரியாக உச்சரிக்க முடியாமல் ரைஸ் என்று உச்சரித்தார்கள். இவ்விதமாக அரிசி என்னும் தமிழ்ச் சொல் யவனர்களால் ரைஸ் என்று வழங்கப்பட்டு வந்ததை, இப்போது ஆங்கிலேயர்களும் வழங்கி வருகிறார்கள். ஆங்கிலேயர்களால் நம் நாட்டிற்கு நூதனமாகக் கொண்டுவரப்பட்ட சோப் (Soap) என்னும் பொருளை நாமும் சோப் என்றே வழங்கி வருகிறோம் அல்லவா?

Ginger—ஜிஞ்சர்=இஞ்சிவேர் (இஞ்சி). இஞ்சி அல்லது இஞ்சி வேருக்கு ஆங்கிலத்தில ஜிஞ்சர் (Ginger) என்று பெயர். (ஜீரணமாகாவிட்டால் ஜிஞ்சர் பீர் என்னும் பானகத்தை வாங்கிக் குடிக்கிறோம். இது இஞ்சி சேர்த்து செய்யப்பட்டது) இந்த ஜிஞ்சர் பீர் என்னும் சொல்லும், இஞ்சி வேர் என்னும் தமிழ்ச் சொல்லின் சிதைவேயாம். முற்காலத்தில் நமது நாட்டி

ுள்ள மலையாளக் கரையி லிருந்து இஞ்சி வேர் ஐரோப்பா தேசங்களுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டது.

Betel—பீற்றில்—வெற்றிலை. வெற்றிலை போடும் வழக்கம் இந்தியாவில்தான் உண்டு. வெற்றிலையும் நமது நாட்டுப் பொருளே. இதனை ஆங்கிலத்தில் பீற்றில் என்று சொல்லு கிறார்கள். பீற்றில் என்பது வெற்றிலை என்றும் தமிழ்ச் சொல் லின் சிதைவே. வண்டி—பண்டி, வெல்லம்—பெல்லம், வாலி—பாலி என்பதுபோல வெற்றிலை என்பதில் உள்ள வகரம் பகர மாயிற்று. லை என்னும் எழுத்தைச் சரியாக உச்சரிக்கமாட்டா மல் ல் என உச்சரித்தார்கள். இவ்விதம், நமது நாட்டிற்கு வந்த போர்ச்சுகீஸியர், ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பியர்கள் வெற் றிலையை பீற்றில் என்று வழங்கி வருகிறார்கள்.

கட்மரம்—கட்டுமரம். நமது நாட்டுக் கடற்கரை யோரத் தில் வசிக்கும் மீன் பிடிப்பவர்களாகிய பட்டினவர்கள் கட்டு மரத்தை உபயோகப்படுத்தி வருவது எல்லோருக்கும் தெரியும். 5 பெரிய நீண்ட மரக் கட்டைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி உண்டாக்கப்படுவதால் கட்டுமரம் என்று காரணப் பெயர் உண்டாயிற்று. இத் தமிழ்ப் பெயரையே ஆங்கிலேயர் கட்மரம் என்று வழங்கி வருகிறார்கள்.

மிளகாய். ஆங்கிலேயர் நமது நாட்டில் வந்தது மல்லாமல் பல் வேறு பொருள்களை நமது நாட்டில் கொண்டுவந்து குடி யேற்றிவிட்டார்கள். அவை குடி |வகைகளும், இங்கிலீஷ் காய் கறி வகைகளும் குட்டிப்பலா (Bread fruit tree) முதலிய மரங் களும், இன்னும் பல பழக்க வழக்கங்களுமாம். இவர்களால் குடியேற்றப்பட்ட பொருள்களில் நன்மை பயப்பனவும் உண்டு; தீமை பயப்பனவும் உண்டு. ஆனால் பெரும்பான்மையும் தீமை பயப்பனவே. இங்கு, தோட்டி முதல் தொண்டைமான் வரை யில் நம்மவர் அனைவராலும் நாடோறும் கையாளப்பட்டு வருகிற சிலவற்றைமாத்திரம் கவனிப்போம்.

மிளகாய் என்பது இப்போது எல்லோருக்கும் அறிமுக மானதும் நாடோறும் உபயோகிக்கப்பட்டு வருவதுமான ஒரு பொருள் என்பது உண்மையே. ஆனால் இது நமது நாட்டுப் பொருளல்ல. 200 வருஷங்களுக்கு முன்னிருந்த நமது மூதா தையருக்கு மிளகாய் என்பது இன்னதென்று தெரியமாட்டாது. மலையாள மொழியில் இதற்கு கப்பல் மிளகு என்று பெயர்.

இப் பெயரே, இதனை வெளிநாடுகளி லிருந்து கப்பலில் கொண்டு வரப்பட்டது என்று நன்கு விளக்குகிறது.

இந்தியராகிய நாம் முக்கியமாகத் தென் இந்தியராகிய நாம் நாளுக்கு நாள் தலை முறைக்குத் தலைமுறை வலி குன்றி ஊனற்றுப் போவதற்கான பல காரணங்களுள் முக்கியமானது இந்த மிளகாய்தான். இது உடல் நலத்திற்கு முக்கிய காரணமான இரத்தத்தைக் கெடுத்துவிடுகிறது. இதன் துர்க்குணத்தைப் போக்க கொத்தமல்லி விதை (தனியா) இதனுடன் சேர்த்து சமைக்கப்படுகிறது. என்றாலும் இதன் துர்க்குணம் போவதில்லை. இதனை அடியோடு நீக்கிவிடுவது உத்தமம். இதற்குப் பதிலாக மிளகை உபயோகிப்பது எவ்வளவோ நன்மை பயக்கும். ஆனால், மிளகு அதிக விலையுள்ளதாகவும், மிளகாய் குறைந்த விலையுள்ளதாகவும் இருப்பதால் எல்லா மக்களும் மிளகாயையே வாங்கி உண்டுவருகிறார்கள்.

நமது பண்டைக்காலத்துப் பெரியோர்கள், உணவுப் பொருள்களில் மிளகு சேர்த்து உண்டுவந்தார்கள். ஆகையால் அவர்கள் எவ்வளவோ தேக சுகத்தோ டிருந்து வந்தார்கள். இப்பொழுதும் கூட ஐரோப்பியர் ஆகாரத்தில் மிளகைத்தான் சேர்த்து உண்டு வருகிறார்கள். இப்போதுங்கூட மிகுந்த ஆசாரமான குடும்பங்களில் சிராத்தம் முதலிய வைதிகமான காலங்களில் மிளகாயை உபயோகப்படுத்துவதில்லை. மிளகை உபயோகப்படுத்தி வருகிறார்கள். நமது பண்டைக்காலத்து புராண இதிகாசங்களிலும்கூட மிளகைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி மிளகாயைப்பற்றி ஒன்றுமே காணப்படவில்லை. மிளகினால் உண்டாகும் குணத்தை நன்கறிந்த ஐரோப்பியர்கள், நமது நாட்டு மிளகையுண்டு தேக சுகத்தோடு வாழ்ந்துவர, நாம் மிளகை அவர்களுக்கு விற்றுவிட்டு, குறைந்த விலையுள்ளதும் ஆனால் பெருந் தீமை விளைவிப்பதுமான மிளகாயை உண்டு நாளுக்குநாள் இரத்தங்கெட்டுப் பலங் குன்றிவருகிறோம். இது என்னமதி! மிளகாய் நமது நாட்டில் இப்போது நிலைத்து நமது நாட்டுச் சொந்தப்பயிராக ஆய்விட்டபடியால் நமது நாட்டுமக்கள் மிளகாயைத் தின்னாமல் பகிஷ்காரம் செய்ய முற்படமாட்டார்கள் என்பது உறுதி.

புகையிலை:—இதுவும் அயல் நாட்டி லிருந்து ஐரோப்பியர்களால் கொண்டு வரப்பட்ட பொருள். இதுவும் நமது நாட்டில்

நிலைத்துவிட்டது. புகையிலை உபயோகிக்காத மனிதர் இல்லை. மூக்குத்தூள், பீடி, சிகரெட், சுருட்டு, வாய்ப்புகையிலை முதலிய பலவிதமாக இது உபயோகப்பட்டு வருகிறது. இதன் தீமை களை டாக்டர்கள் நன்கு எழுதி யிருக்கிறார்கள். நாமும் அத் தீமைகளை எடுத்துச் சொன்னால், புகையிலையிலேயே மூழ்கிக் கிடக்கிற இந்த உலகம் எழுதுகிறவரை எள்ளி நகையாடும். அன்றியும் காற்சட்டையும் மேற்சட்டையும் காலர் டையும் நாக ரீகமா யணிந்து உல்லாசமாய் நடக்கும் நாகரீகர்களுக்கு அழகு செய்வது புகையிலையில் செய்த சிகரட் அல்லவா? ஆகையால் புகையிலையை பகிஷ்கரியுங்கள் என்று சொன்னால் நாகரீகர்கள் நம்மை நாட்டுப்புறத்தான் என்று கேலி செய்வார்கள். இதன் தீமையை அவரவர்களே அறிந்து நீக்கிவிடுவார்கள் என்பது எனது கருத்து.

காபி - தேயிலை—காபியும் தேயிலையும்கூட அந்நிய நாட்டுப் பங்காளிகள்தான். இதன் தீமைகளைப்பற்றிக் கவனிக்காமல் எல்லோரும் இவற்றைச் சாப்பிட்டு வருகிறார்கள். இவற்றைச் சாப்பிட்டவுடன் நரம்புகளுக்கு ஒருவித உற்சாகத்தைக் கொடுத் துப் பிறகு நரம்புகளை பலவீனமாக்கிவிடும். அன்றியும் காபி மலபந்தத்தை யுண்டாக்குகிறது. தேயிலை தூக்கத்தைக் கெடுத்துவிடுகிறது. மலபந்தப்பட்டு தூக்கமும் கெடுமானால் மனிதனுக்கு வேறே வினை வேண்டியதில்லை. இவற்றைக் காரணமாகக்கொண்டு மற்ற எல்லா வியாதிகளும் தொடர்ந்து வந்துவிடும். நகர வாசங்களில் காபி தேயிலைப்பானம் நாகரீக முறையில் கையாளப்பட்டு வருகிறது. அன்றியும் நகரத்தில் தான் நோய்களும் டாக்டர்களும் ஏராளமாகக் காணப்படுகிறார் கள்.

இது ஒருபுற மிருக்க, காபி, தேயிலை நம்மவர்களால் பயிர் செய்யப்படவில்லை. நமது நாட்டில் நீலகிரி, மேற்குத் தொடர்ச்சி மலை முதலிய விடங்களில் ஐரோப்பியர்கள் வந்து இவைகளைப் பயிர் செய்கிறார்கள். அவர்கள் பயிர் செய்வதை நாம் வாங்கி உபயோகித்து வருகிறோம். அதாவது அவர்கள் பொருளை வாங்கி அவர்களைச் செல்வந்தராக்கி விடுகிறோம். ஆகவே இதில் இரண்டுவிதமான தீமைகள் இருக்கின்றன. ஒன்று; நாம் ஆங்கி லேயர்களின் பொருளை வாங்கி அவர்களுக்கு நமது பணத்தைக் கொடுக்கிறோம். இதனால் நமது பணம் இங்கிலாந்துக்குப் போகிறது. இரண்டாவது; அவ்விதம் காசு கொடுத்து வாங்கிச்

சாப்பிடும் காபி, தேயிலைகளால் உடம்புக்குத் தீமையுண்டாகிப் பலவித நோய்களுக்குக் காரணமா யிருக்கிறது. ஆனால், நாட்டுப் புறத்து வாசிகள்கூட "மோர் சாப்பிடுகிறீரா? நீசித் தண்ணீர் சாப்பிடுகிறீரா?" என்று கேட்பது அகௌரவம் என்று நினைத்து "காபி சாப்பிடுகிறீரா" என்று சொல்லி விருந்தாளியை உபசாரம் செய்துவருகிற இக்காலத்தில் காபி சாப்பிடாதே தேத்தண்ணீர் அருந்தாதே என்று சொன்னால், அப்படிச் சொல்லுகிறவரைப் பயித்தியக்காரன் என்று சொல்லாம லிருப்பார்களா?

உருளைக் கிழங்கு:—இதுவும் நமது நாட்டில் குடிபுகுத்தப் பட்ட பொருள்தான். இப்போது நமது நாட்டில் குளிர்ச்சியான இடங்களில் பயிரிடப்படுகிறது. காபி, டீ, புகையிலை, மிளகாய் இவைகளைப் போலவே இதுவும் தினசரி உபயோகப் படுத்தும் பொருளாய்விட்டது. ஹோட்டல்களிலும் கலியாணம் முதலிய விசேஷ விருந்துகளிலும் இது இடம் பெற்று விட்டதென்றால் இது நம்முடன் எவ்வளவு நெருங்கிப் பழகுகிறது என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் காபி, டீ, மிளகாய் முதலியவைகளைப்போல இது தீமை பயக்கும் பொருளல்ல. ஆகையால் இதனை ஒருவரும் பகிஷ்கரிக்க வேண்டியதில்லை; ஐயமின்றி தாராளமாக உபயோகப்படுத்தலாம்.

பெட்ரோல் சம்பந்தம்.

பட்டிக்காட்டிலிருந்து பட்டணம் போயிருந்த சம்பந்தம் என்பவன் மோட்டார்கார்களிக்கு பெட்ரோல் எண்ணெய் விடுவதால் வேகமாக ஓடுகிறது என்பதை அறிந்தான். அவன் திரும்பி தனது கிராமத்திற்கு வந்தவுடன் தனது ஒத்தை வண்டி மாட்டிற்கும் பெட்ரோல் ஊற்றினால் நன்றாய் மோட்டார் மாதிரி ஓடும் என்று பத்துகாலன் பெட்ரோல் வாங்கி வந்து பாலடை மூலம் மாட்டிற்கு ஊற்றிவிட்டான். மாட்டின் ஆவி மறுதினம் ஏரோபிளேன் மாதிரி பறந்துவிட்டது!

*　　*　　*

மனிதன் மண்டை ஓட்டில் இருபத்திரண்டு எலும்புகளிருக்கின்றன.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத் தலைவன்

(ஸ்ரீமான் மயிலை-சீனி. வேங்கடசாமி எழுதியது)

13-வது அத்தியாயம்.

பாஜா மலைக் குகை.

இராமன் தப்பி ஓடிவிட்ட பிறகு கள்ளர்கள் தாதாஜியையும், காசிபாயையும் வழி நடத்திக்கொண்டு காட்டைக் கடந்து சென்றார்கள். தாதாஜியும், காசிபாயும் தப்பி ஓட முயற்சி செய்யவில்லை; அப்படிச் செய்வதும் பயனற்ற காரியம் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் இராமன் தப்பி யோடிவிட்டபடியால், அவன் நட்டாஜியிடம் போய் செய்தியைத் தெரிவித்துத் தங்களை விடுவிக்க முயற்சி செய்வான் என்னும் நம்பிக்கை அவர்களுக்குத் தோன்றியது. ஆனால், அவன் அப்படிச் செய்வானா? ஒருவேளை அவன் சும்மா இருந்துவிட்டால் என்ன செய்வது? திருடர்கள் காசிபாயை என்னென்ன மானபங்கம் செய்வார்களோ! என்று இவ்விதமான பல எண்ணங்கள் இருவர் மனதிலும் தோன்றி வதைத்தன. அவர்கள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டே மௌனமாகச் சென்றார்கள்.

கடைசியாக எல்லோரும் காட்டைக் கடந்து ஒரு மலைச் சாரலை யடைந்தனர். அங்கிருந்து மலையின்மேல் ஏறினார்கள். சுமார் நானூறு அடி உயரம் ஏறிச் சென்றபோது பல மலைக் குகைகள் வரிசையாகக் காணப்பட்டன. அக் குகைகள் கிழக்கு முகம் நோக்கி யிருந்தன. இவர்கள் தெற்கு முகமாக நோக்கி நடந்தார்கள். எட்டொன்பது குகைகளைக் கடந்து சென்ற பிறகு, மற்றெல்லாவற்றையும் விடப் பெரிதாகக் காணப்பட்ட ஒரு குகையண்டை வந்து நின்றார்கள். இக் குகைக்கு பாஜா மலைக் குகை என்று பெயர். கைதேர்ந்த சிற்பிகளால் அழகாகப் பாறையில் செதுக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. இக் குகைகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே பௌத்த சன்னியாசிகள் வசித்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் கொல்லா விரதம் மேற்கொண்டு பௌத்த தருமத்தைக் கடைப்பிடித்து இக் குகை

களில் தவம் செய்துகொண் டிருந்தார்கள். சாதுக்கள் வசித்த இக் குகைகளில் இப்போது திருடர்களும், கொள்ளைக்காரர்களும் வசித்து வருகிறார்கள்! ஆ! காலத்தின் கொடுமை என்னே! எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்ட சன்னியாசிகள் வசித்த இடத்தில், இப்போது மக்களால் நிந்தித்து அவமதிக்கப்படும் கொள்ளைக் கூட்டத்தார் வசித்து வருகிறார்கள்! சாந்தம், பொறுமை, அன்பு, நல்லொழுக்கம் முதலிய உத்தம குணங்கள் நிறைந்த பெரியோர்களுக்கு உறைவிடமா யிருந்த இந்த பாஜா மலைக்குகைகள், இப்போது இரக்கமற்ற கொடுந்தொழில் வல்ல பாவங்களுக் கஞ்சாத கொள்ளைக்காரர்களுக்கு உறைவிடமாய் மிளிர்கின்றன! காலத்தின் மாறுபாட்டைத் தடுப்பவர் யார்? உரோமாபுரி, கிரேக்கம் முதலிய ஐரோப்பிய நாடுகள் நமது தேசத்துத் துணியை எதிர்பார்த்திருந்த காலம் போய், இப் போது நமது நாட்டார் ஆங்கிலேய துணிகளை வாங்கி உடுத்தி வரவில்லையா? நமது சேர சோழ பாண்டியர்கள் நாகரிகமாய் அரசாண்ட காலத்தில், கோவணமும் கட்டத் தெரியாமல் நிர் வாணமாய் தோலைப் போர்த்துத் திரிந்த ஆங்கிலேயர்கள் இப் போது நமது நாட்டை நாகரிகத்தோடு ஆண்டு வருகிறார்களே! இதுவும் காலத்தின் மாறுபாடன்றோ? இது இருக்கட்டும். நாம் கதையைத் தொடர்ந்து செல்வோம்.

கொள்ளைக்காரர்கள் தங்கள் சிறையாளிகளோடு வந்து நின்ற பெரிய குகை அறுபது அடி நீளமும் முப்பது அடி அகல மும் உடையது. இக் குகையின் இடையில் நீண்ட வசத்தில் இரண்டு வரிசையாகத் தூண்கள் அமைந்திருப்பதால் இது மூன்று பிரிவாகப் பிரிந்து காணப்பட்டது. குகையின் ஒரு கோடியில் வில் வளைவான மண்டபமொன்று இருக்கிறது. இம் மண்டபத்தில், பௌத்த சாதுக்கள் வசித்த காலத்தில் புத்த விக் கிரகம் இருந்திருக்கும். ஆனால், இப்போது அங்கு ஒன்றுங் காணப்படவில்லை; ஒரு பெரிய பெட்டி மாத்திரம் காணப்படு கிறது. இப் பெட்டியில்தான், கள்வர் தலைவன் தான் கொள்ளை யடித்த பொருள்களைப் பத்திரமாகப் பூட்டி வைப்பான். இப் பெட்டிக்கு எதிரில், பாய் பரப்பி திண்டு, மெத்தை போடப்பட் டிருக்கிறது. கள்வர் தலைவன் குகைக்குள் போய் திண்டின்மேல் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான். தாதாஜியையும், காசிபாயை யும் அவனுக்கு வலதுபுறத்தில் உட்காரச் செய்தார்கள்.

கள்ளர்களில் ஒருவன் ஒரு கிண்ணத்தில் ஏதோ கொண்டு வந்து தலைவனுக்குக் கொடுத்தான். இன்னொருவன் "உக்கா"வை

அவனுக்கருகில் கொண்டுவந்து வைத்தான். தலைவன், கிண்ணத்திலுள்ளதைக் குடித்துவிட்டு, தனது விருந்தாளிகளுக்கு அல்லது சிறையாளிகளுக்குப் பால் கொண்டுவந்து கொடுக்கும் படி கட்டளையிட்டான். அவ்வாறே காய்ச்சிய பாலில் சர்க்கரையிட்டு தாதாஜிக்கும், காசிபாய்க்கும் கொடுக்கப்பட்டது.

கள்ளர் தலைவன் தாதாஜிக்கும், காசிபாய்க்கும் பால் கொடுத்து மரியாதை செய்தபிறகு ஒருவனை அழைத்து, அவர்கள் இரண்டு பேரையும் பக்கத்துக் குகையில் கொண்டுபோய் விடும்படி கட்டளையிட்டான். அவ்விதமே அவர்கள் அடுத்த குகைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டனர். ஆனால், அக் குகைக்கு வாயிற்புறத்தில் சில கள்ளர்கள் காவல் நிற்பதைக் கண்டவுடன் தாதாஜியும், காசிபாயும் தாங்கள் சிறை வைக்கப் பட்டிருப்பதாகத் தெரிந்துகொண்டார்கள். கள்வர் தலைவன் எந்த நிமிஷத்தில் எவ்விதமாக மானபங்கம் செய்வானோ என்னும் ஏக்கம் அவர்களுக்கு உண்டாய்விட்டது. காசிபாய், கள்ளன் தன்னைத் துன்பப் படுத்துவதற்குள் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட நிச்சயித்துவிட்டாள். தாதாஜியும் சமயம் நெருக்கடியாக வந்துவிட்டால் முதலில் தன் மகளைக் கொன்று விட்டுப் பிறகு தானும் தற்கொலை செய்துகொள்வது என்று முடிவு செய்துகொண்டார். ஆனால் இராமன் சிவாஜியையாவது, நட்டாஜியையாவது கூட்டிக்கொண்டுவந்து தங்களை விடுவிப்பான் என்னும் நம்பிக்கை கொஞ்சம் இருந்தபடியால் அவர்கள் கடைசி வரையில் பார்க்கலாம் என்று நினைத்துக் கடவுளைத் தொழுதார்கள். ஆயிரக்கணக்கான யோசனைகள் அவர்கள் மனதில் தோன்றி அவர்களைச் சங்கடப் படுத்திக்கொண்டிருந்தன.

இவர்கள் இங்கே இவ்விதம் மனம் வருந்திக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும்போது, மற்ற கள்ளப் பயல்கள் எல்லோரும் அடுத்த குகையில் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் சாப்பிட்டுக்கொண்டுமிருந்தார்கள். கடவுளின் நீதிக்கும், மனிதர்களின் சட்டத்துக்கும் அடங்காத பாதகர்களாயிருந்தும், இவர்கள் ஜாதி இறுமாப்பை மாத்திரம் இன்னும் விடவில்லை. இந்தக் கள்ளக் கூட்டத்தில் முகம்மதியர்களும் கலந்திருந்தபடியால், முகம்மதியரல்லாத மற்றவர்கள் ஓரிடத்தில் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டனர். முகம்மதியர்கள் இன்னொரு மூலையில் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். இக் கள்ளர்களின் தலைவனோவென்றால், தான் பிராமண குலத்தில்

பிறந்தவனென்று பெருமை பேசிக்கொண்டு தனியாக உட்கார்ந்து சாப்பிட்டான். ஆனால் ஆட்டு மாமிசத்தையும்; பறங்கிச் சாராயத்தையும் திருப்தியாகச் சாப்பிட்டான். நாகரிகம் படைத்த இக்காலத்தில், ஜாதி வித்தியாசம் பாராத பிரிட்டிஷ் அரசாட்சியில், ஜெயிலில் சிறைப்பட்டிருக்கும் குற்றவாளிகளில் பார்ப்பான், பார்ப்பன ரல்லாதான் என்னும் வித்தியாசம் பாராட்டி உணவளிக்கப்படுகிற தென்றால், இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இருந்த கள்ளர்களும் திருடர்களும் ஜாதி வித்தியாசம் பாராட்டுவது ஆச்சரியமல்ல.

கள்ளர்கள் சாப்பிட்டானவுடன் காலியாயிருந்த குகைகளில் சென்று சிலர் பாடிக்கொண்டும் சிலர் ஒருவரையொருவர் பரிகாசம் செய்துகொண்டும் சிலர் படுத்துத் தூங்கிக்கொண்டும் இருந்தார்கள். இந்தச் சமயத்தில் சந்நியாசி ஒருவர் பெரிய குகையண்டை வந்து அங்கிருந்த ஒரு மாமரத்தடியில் புலித்தோலைப் பரப்பி அதன்மேல் உட்கார்ந்தார். இப்படி வந்தவர் சிவாஜியையும் நட்டாஜியையும் லோககாட் கோட்டைக்கு அனுப்பிவிட்டு திருடர்களின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக வந்த மரோபா சுவாமிகளே. அவர் அங்கு வந்து உட்கார்ந்ததைக் கண்ட கள்ளர்கள், பாதகத்துக்கஞ்சாத பாவிகளா யிருந்தும், அவரிடத்தில் வந்து அவரைச் சூழ்ந்துகொண்டு அவரைக் கும்பிட்டு மரியாதை செய்தார்கள். சுவாமிகள் ஒன்றையும் கவனியாமல் ஏதோ யோசித்தவண்ணம் இருந்துவிட்டு சற்றுநேரம் பொறுத்து, "நீங்கள் என் இங்கு வந்தீர்கள்? உங்கள் தலைவன் கடவுளுக்கு பயப்படாத பாவியல்லவா? அவன மோரகான் கோயிலிலிருந்த கணபதியின் தங்க விக்கிரகத்தைத் திருடிக்கொண்டு வந்து அதை உருக்கி அந்தப் பொன்னை வைத்துக்கொண்டிருக்கிறான் அல்லவா? இப்படிப்பட்ட பாவிகள் ரொம்ப நாளைக்கு இருக்க மாட்டார்கள். அற்ப ஆயுசில் கஷ்டப்பட்டு செத்துப்போவார்கள். நீங்களும் அவனுடன் சேர்ந்திருப்பதால் நீங்களும் அழிந்து நாசமாய்விடுவீர்கள்" என்றார்.

அதைக்கேட்டுக் கள்ளர்களெல்லோரும் மௌனமாயிருந்தார்கள். அவர்களில் ஒருவன் மாத்திரம் சற்று தைரியத்துடன் "என் சாமி! நீங்கள்தான் சொல்லுங்களேன். எங்கள் எஜமான் எங்களுக்குச் சாப்பாடு கொடுக்கிறார். அவர் உப்பைத் தின்றுவிட்டு அவருக்கு நாங்கள் துரோகம் செய்யலாமா?" என்றான்.

இந்தச் சமயத்தில் கள்ளர் தலைவன் குகையின் வாயிலில் நின்று பேசும் குரல் கேட்டது. அவன் கள்ளர்களை நோக்கி "என்ன பேசுகிறீர்கள்? உங்களுடன் பேசுகிற அந்த ஆண்டிப் பயல் யார்? நான் இருக்கும் இடத்தில் பண்டாரப்பயல்களுக்கு என்ன வேலை யிருக்கிறது? சீக்கிரம் இந்த இடத்தைவிட்டு அவனைப் போகச் சொல்லுங்கள்" என்று அதிகாரமான குரலில் திட்டமாகச் சொன்னான். ஆனால் மரோபா சுவாமிகள் அதற்கு அசையவில்லை. அவர் கள்ளர்களைப் பார்த்து,

"கேட்டீர்களா? அந்த நாஸ்திகன் சொன்னதை! கணபதியின் அடிமையாகிய என்னை, ஒரு சாதுவை இந்த நாஸ்திகன் பயமுறுத்துகிறான்! நான் இங்கேதான் இருப்பேன், இவன் என்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். கணபதி என்னை காப்பாற்றுவார்" என்று சொல்லி சட்டமாக அவர் அசையாமல் உட்கார்ந்துகொண்டார்.

கள்ளர்கள் மெதுவான குரலில் அவரைப் பார்த்துத் தங்கள் தலைவன் பொல்லாதவனென்றும் அதிலும் அவன் இப்போது சாராயத்தைக் குடித்துவிட்டிருப்பதால் என்னவாகிலும் செய்துவிடுவானென்றும் உடனே புறப்பட்டுப் போய்விடும்படியும் சொன்னார்கள்.

சுவாமிகள் "அவன் என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். கணபதி என்னைக் காப்பாற்றுவார்" என்று சொல்லி அசையாமல் உட்கார்ந்துகொண்டார். தலைவன் கீழே இறங்கி வந்து அங்கிருந்தவர்களைப் பார்த்து சுவாமிகளைத் தடியால் அடித்து ஓட்டும்படி சொன்னான். பாவத்துக்கஞ்சாதவர்களாயிருந்தும் அத்திருடர்கள் ஒரு சந்நியாசியைத் துன்பப்படுத்த மனமில்லாமல் பின்வாங்கினார்கள். இக் குறிப்பை யறிந்த தலைவன், அவர்களை வற்புறுத்தாமல் "அவனை சீக்கிரம் போகச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு குகைக்குள் போய்விட்டான். போனவன் சாராயத்தைக் கிண்ணங் கிண்ணமாகக் குடித்துவிட்டு அந்த மயக்கத்தினால் திண்டின்மேல் சாய்ந்து தூங்கிவிட்டான்.

கள்ளன் குகைக்குள் போனபிறகு, மரோபா சுவாமிகள் கள்ளர்களோடு தாராளமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவர் கள்ளர்களுக்கு நற்புத்தி சொன்னார். கொள்ளையடிப்பது பாவம்

என்றும் சிவாஜியின் சேனையில் சேர்ந்து போர் புரிவதால் தேச ஊழியமும் புண்ணியமும் கிட்டும் என்றும் சிவாஜி அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பாரென்றும் அதனால் அவர்கள் கவுரவமாக வாழக்கூடும் என்றும் சொன்னார். இன்னும், சிவாஜியின் சினேகிதரான தாதாஜியையும் அவர் மகளையும் அவர்கள் சிறைப்பிடித்து வைத்திருப்பதைச் சிவாஜி தெரிந்துகொண்டாரென்றும் அவர் கூடிய சீக்கிரம் ஆட்களைக் கூட்டிக்கொண்டு வந்து கொள்ளைக்காரர்களைக் கொன்று போட்டுவிடுவார் என்றும் சொல்லி, உடனே கள்ளர்களெல்லோரும் கொள்ளைத் தொழிலைவிட்டுச் சிவாஜியைச் சேர்ந்து அவரிடத்தில் ஊழியம் செய்வது நல்லதென்றும், அல்லது தங்களுக்கிஷ்டமான இடங்களுக்குப் போய் விடுவது உத்தமம் என்று அவர் அவர்களுக்குச் சொன்னார். சுவாமிகள் சொல்லியது சரியென்று கள்ளர்களுக்குத் தோன்றியது. உண்மையிலேயே அவர்களுக்குத் தங்கள் தலைவனிடம் அதிக பற்றுக் கிடையாது. ஏனென்றால் தாங்கள் கொள்ளை கொண்ட பொருள்களில் பெரும்பாகத்தைக் கள்வர் தலைவன் எடுத்துக்கொண்டு சொற்ப பாகத்தை மாத்திரம் அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது வழக்கம். இது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவன் கொடுத்ததை வாங்கிக்கொண்டு அவனைத் தொங்கிக்கொண்டிருப்பதைவிட சிவாஜியிடம் சிப்பாய் வேலையில் அமர்ந்து மாதச் சம்பளம் பெற்று கௌரவமாகப் பிழைப்பது மேலென்று அவர்களுக்குத் தோன்றியது. ஆனால், அவர்கள் ஒருவராவது தங்கள் கருத்தை வெளியிடாமல் மௌனமாகவே யிருந்துவிட்டார்கள்.

மரோபா சுவாமிகள், நெடுநேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டார். இப்போது மாலை வேளை தொடங்கிற்று. இன்னும் வெயில் காய்கிறது. இச் சமயத்தில் கள்ளர்களில் ஒருவன் ஓடிவந்து, குடிமயக்கத்தால் தூங்கும் தலைவனை எழுப்பி ஒரு சிறு சேனை தங்கள் குகையை நோக்கி வந்துகொண்டிருக்கிறதென்று சொன்னான்.

(தொடரும்.)

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம்பிள்ளை எழுதியது.)

மதுசாரம் மெய்காப்பாளரைத் துர்ப்பலமாக்குகிறது.

Alcohol paralises the body guard.

மதுசாரம், நமக்கு வியாதிக் கிருமிகளா லுண்டாகும் அபாயத்தினும் அதிக அபாயத்தை யுண்டாக்குகிறது. எப்படியெனின், அது அக் கிருமிகளைத் தைரியமாக எதிர்த்துச் சண்டையிடுஞ் சூக்கும ரந்திரங்களின் சுபாவத்தை மந்தமாக்கிவிடுகின்றது. பிறகு, அவைகளுக்குப் பகைவராகிய கிருமிகளோடு சண்டை செய்ய விருப்பமும, சக்தியுங் குறைகின்றன. அதனாலேயே விஷக்கிருமிகள் ஜயமடைந்து மரண முண்டாக்குகின்றது.

24-மணி நேரத்தில் மரணம்.

சாமர்த்தியமும், பலசாலியுமான ஒரு வாலிபனுக்கு நிமோனியா நோய் (pneumonia-சுவாசப்பை யழற்சி) கண்டது. அவன் 24 மணி நேரத்தில் இறந்து போனான். அவனுடைய டாக்டர், "அவன் மதுபானஞ் செய்யாதிருந்தானாயின் இன்றைய தினம் இறந்திருக்க மாட்டான்" என்று சொன்னார். உண்மையென்னவெனின், அவ்வாலிபன் உஸ்கி குடியனாயிருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் பகற்காலத்தில் பல தடவையும் அதனைக் குடித்துவந்தான். அதனால், அவனுடப்பு புண்பட்டு மெலிந்துபோனது மன்றி, அவன் உடம்பிலுள்ள மெய்க்காப்பாளருங் கொல்லப்பட்டனர். விஷக் கிருமிகள் ஜயமடைந்தன; வாலிபனும் இறந்துபோனான்.

எடின்பர்க் (Edinburgh) நகரத்தில் டாக்டர் மூயிர்ஹெட் (Dr. Muirhead) என்பவர், சுவாசப்பை அழற்சி நோய்க்கு வைத்தியஞ் செய்வதில், அந்நோயாளி மதுபானஞ் செய்யாதவனாயிருந்தால், அவன் சௌக்கிய மடைவதைப்பற்றித் தமக்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை யென்று கூறினார்.

மதுசாரம் எப்போதும் பகைவர் பக்கமே சேருகின்றது.

(1) அது, கிருமி கொல்லுஞ் சக்தி (Germicidal power) யின் வளர்ச்சியைத் தடுக்கின்றது.

(2) அது, வியாதிக் கிருமிகளை யெதிர்த்து நம்மைக் காக்க வல்ல சூக்கும ரந்திரங்கள் மயக்கமடையவும், அவற்றின் ஊக்கங் குறையவுஞ் செய்கிறது. அபாயத்தை யுண்டாக்கும் கிருமிக ளிருப்பதைக் கண்டதும், அவற்றைக் கொல்லுந் தங்கள் கடமை யைச் செய்யவொட்டாமல் அசைவற்றிருக்கச் செய்கிறது.

குடிப்பழக்கமே யில்லாத சிறுவனொருவன் குணமடைந்தது.

ஒரு பைத்தியம்பிடித்த நாய், 13-வயதுடைய சிறுவனையும், ஒரு மனிதனையும் ஒரே சமயத்தில் கடித்தது. சிறுவனை முகத் திலும் கழுத்திலும், மனிதனைக் கையில் மாத்திரமும் கடித்தது. இவர்களைப் பார்த்தவர்கள் "சிறுவன் இறந்துபோவான்; மனி தன் பிழைப்பான்" என்று சொன்னார்கள். இவர்களிருவரையும் டாக்டர் மிக்க கவலையோடு சிகிச்சை செய்து வந்தார். ஆனால், மனிதன் இறந்துபோனான்; சிறுவன் குணமடைந்து பிழைத் தான். டாக்டர் "இது மதுபானத்தால் வந்த கேடு. சிறுவன் குடிப் பழக்கமே யில்லாதவன், மனிதனோ முழுக் குடியன்" என்றார்.

பண்டித லெய்டினென் (Proffessor Laitinen) என்பவர் குடிப் பழக்கமே யில்லாதவரும், மிதமான குடியருமாகிய பலருடைய இரத்தத்தைச் சோதித்துப் பார்த்ததில், குடிப் பழக்கமே யில்லாதவருடைய இரத்தத்தினும், குடியருடைய இரத்தம் விஷக் கிருமிகளைக் கொல்லச் சக்தி யில்லாமல் மிகவும் மெலிந்திருந்த தெனக் கண்டனராம்.

மதுசாரம், தேகத்திலுள்ள வியாதிக் கிருமிகளை எதிர்த்து நம்மைக் காக்கவல்ல சேனைகளை சேதப்படுத்தி, க்ஷயரோகத் (Consumption) தையும், மற்ற நோய்களையும் பரவச் செய்வதில் உதவி புரிகின்றது. ஆகவே, க்ஷயரோகம் பரவுவது மதுசாரத் தின் செயலேயாம். ஒருவன் பலசாலியா யிருந்தும் குடியனா யிருப்பானாயின், அவன் மதுபானத்தை எதிர்த்து ஒழிப்பதற்கு முடியாது. அவன் அந்நோயினின்றுங் குணமடைவதை மது சாரந் தடுக்கின்றது. பிறகு, அவன் பாயும் படுக்கையு மாகின்றான்.

புற்றுவிரணம், விப்புருதி, பிளவை—Cancer

என்னும் வியாதியால் ஒவ்வொரு வருடமும் அநேகர் மரணமடைகின்றனர். விருத்தாப்பியத்தாலும், அழற்சியாலும் (Irritation) அல்லது மதுபானத்தாலும் தேகத்தின் எந்தப் பாகத்திலேனும் சூக்கும ரந்திரங்கள் சிறிது சிறிதாகத் தேய்வடையும்போது இவ்வியாதி சம்பவிக்கிறது.

The Rt. Hon. Sir. T. P. Whittaker M.P. அவர்கள், மிதமான குடியர், குடிப்பழக்கமே யில்லாத அநேகருடைய மரணத்தைப்பற்றி விசாரித்ததில், மதுபானஞ் செய்தவர்கள் மரணமே அதிகமாகக் காண்கிறதென்று எழுதியிருக்கின்றார்.

பலவகை மது விற்பவர்கள், மதுசாரங் காய்ச்சி வடிப்பவர்கள், இன்னும் மற்றச் சாராய வகைகள் விற்பவர்களின் மரண விகிதம், மற்றவர்களைப் பார்க்கினும் அதிகமாகிறது.

மதுசாரம், முன்னமே வியாதியால் துன்பப்படுகிறவர்களை பின்னுங் கேடாக்குவது மன்றி, தினந்தோறும் வழக்கமாகக் குடித்து வருவதால், உண்மையில் பல வியாதிகளை யெழுப்பி விடுகிறது. அது, தேகத்தைப் பலஹீனப்படுத்தி, இனி நேரிடும் ஒவ்வொரு நோய்க்கும் இடமுண்டாக்குகின்றது. ஏனெனின்,

மதுசாரம் ஒவ்வொரு நோய்க்கும் நல்ல உதவியாகின்றது.

சாதாரணமாகக் குடிப்பழக்கமே யில்லாதவர்களுக்கு நோய் அதிகமாக வருகிறதில்லை. நோய் வந்தாலும் குடியர்களைப் பார்க்கினும் அவர்கள் குணமடைவது சுலபம்.

மதுபானத்தைப் பார்க்கினுங் கெடுதி செய்யும் விஷம் வேறொன்றுமில்லை. நோய்கள் இயற்கையாகவே குணமடையுந் தன்மையை மதுபானங் கெடுக்கின்றது. நோயை யெதிர்த்து நிற்குந் தேக நிலைமை, மதுசாரத்தால் கெடாதிருக்குமாயின், க்ஷயரோகம் போன்ற அநேக ரோகங்கள் எளிதில் குணமடையக் கூடும். அன்றியும், மதுபானப் பழக்கம், பணத்தைக் குடும்ப காரியத்தில் செலவிடாமல் குடிக்கே செலவிடுதற்கும், பெற்றோரை அலக்ஷியஞ் செய்தற்கும், ஜனக்கூட்டமுள்ள மதுக்கடைக்குள் அடிக்கடி நுழைவதற்கும் புத்தி புகட்டுகின்றது. தேக

போஷணைக்குத் தக்க உணவையும் உடையையுங் குறைத்துவிடுகின்றது.

எவ்வகையிலும் மதுசாரம் உயிரைப் போக்குந் தன்மையது.

இயற்கையின் மகிமைகள், பல சாஸ்திர விநோதங்கள் (Glories of arts and science) இவற்றைக்கண்டு ஆநந்த மநுபவித்தற்கும், அறிவுடைய பெரியோர் கூறியுள்ள உயர்ந்த கருத்துக்களை யுணர்தற்கும், சிறந்த அழகு வாய்ந்த பொருள்களைக் கண்டு மதித்தற்கும் நம்முடைய புலன்கள் பயின்றிருத்தல் வேண்டும். புலன்கள் பயிற்சி யடைவதற்கு அவை கெடாதிருத்தல் வேண்டும். புலன்கள் கெடாதிருத்தற்குத் தேகம் பூரண சுகத்தோடிருத்தல் வேண்டும். தேகம் சுகத்தோடிருந்தால் தான் நமது வாழ்வு உண்மையான வாழ்வாகும். ஆனால் மதுசாரம் தேகத்துள் நுழைந்து புலன்களைக் குருடாக்கி, மனிதனை வாழ்க்கையின்பம் அநுபவித்தற்குக் கூடாமற் செய்கின்றது; அன்றியும், அது, அவன் உயர்நிலைக்குப் போகவேண்டுமென்னும் விருப்பத்தைக் குலைக்கின்றது. அது, அவனைப் பெருமை யடையச் செய்யாமல் சிறுமைக்கே கொண்டுபோகின்றது. எப்போதேனும், அவன் மனச்சாட்சி (Conscience) புத்தி புகட்ட எழுமாயின், மதுசாரம், அதனை யப்போதே மயக்கி மறைக்கின்றது. இவ்வேதுக்களால் மதுசாரம், உயிரைக் காப்பதற்குப் பதிலாக மரணத்திற்கே காரணமாகின்றது.

ஓர் அரண்மனை சொந்தக்காரன், தன் அரண்மனை காவற்காரனுக்கு மயக்கத்தைக் கொடுக்கும் மருந்தையும், தன் போர் வீரர்களுக்கு விஷத்தையுங் கொடுத்திருந்தானானால், அவன் அரண்மனைக்குள்ளே தன் பகைவனிருப்பதைக் கண்டு ஆச்சரியப்படக் காரணமுண்டா? அவன் பகைவன் அவனைக் கொன்றானால், அவனையன்றி வேறு யாரைக் குற்றஞ்கூறுவது? ஆதலின், உன்னைக் காக்கவல்ல மெய்க்காவலரை (body guard) நீ காப்பாற்றிக் கொள். உன்னுடைய யுத்த வீரர்களைப் பலமுள்ளவர்களாகவும், பகைவரைக் கண்டால் சண்டையிடும் முயற்சியிலும் வை. உனக்கு வேண்டுங் காலத்தில் அவர்கள் உன்னைக் காப்பாற்றுவார்கள். இவ்வாறன்றி, மதுசார உபயோகத்தால் அல்லது வேறு ஏதேனும் விஷப் பொருளால் அல்லது சுகாதார நியமங்களை அசட்டை செய்வதால் காவற்காரனுக்கு மயக்கந் தரும் மருந்தையும், போர்வீரர்களுக்கு விஷத்தையுங் கொடுத்த

அரண்மனை சொந்தக்காரனைப் போலவே நீயும் ஆவாய். இப்படி செய்கின்ற எவனும் பகைவர் வரும்போது உண்மையில் துன்பப் படுவான்.

நீ உன்னுடைய இரத்தத்தை மது சாரஞ் சேராதபடி சுத்தமாக வைத்துக் கொள். இப்படிச் செய்வதால், இரத்தம் வியாதியை வரவொட்டாமல் உன்னைக் காப் பாற்றும்.

(தொடரும்)

குங்குலியக் கலய நாயனார் சரிதை

வண்ணைநகர் - ஸ்ரீ. க. வைத்தியலிங்க பிள்ளை, எழுதியது.

கலிவெண்பா.

விப்பிரர்தம் பால னுயிர்கவர மேதிதனில்
வெப்புறவே வந்த விறற்கூற்றை—அப்பொழுதே
காலா லடர்த்த கறைமிடற்றோ னெஞ்ஞான்றும்
வேலார் விழியோடு மேவுபதி—சூலாருஞ்
சங்கினங்கண் முத்துயிர்க்குந் தண்கழனி சூழ்கடவூர்
தங்கி யுறையுந் தனிமறையோர்—திங்களணி
நாதனார் கோயி றனிலே நறைகமழுங்
கோதகன்ற குங்குலியங் கொண்டுசென்று—ஆதரவாய்த்
தூபங் கமழ இருந்தொண் டுஞற்றிவந்தார்
சோபமுறு நல்குரவு தொட்டபின்னுந்—தாபமின்றி
தாமுன் பியற்றிவந்த தொண்டு தவாமலன்பர்
நேமமிகுந் தந்நெறியி னின்றனராற்—றூமவரு
மந்தப் பணியதனை யாற்றிவரு நாளின்மிடி
உந்தி வளர்ந்துமிக வோங்குதலுஞ்—சொந்தமுள
நன்னிலங்க ளோடு நகையா தியனவிற்றும்
பொன்னுள வெலாமழிந்து போய்விடவே—தன்னுடைய
மாதுங் கிளையு மசாரும் பசிப்பிணியாற்
போத வருந்திப் புலம்பலுற்று—யாதுமின்றி
வைகலிரண் டுணொழிந்து வாடுவதைத் தேவிகண்டு
ணைதலின்றித் தாலிதனை நாயகனார்—கையதனி
லீந்திதற்கு நெற்கொண் டிவண்வருதி ரென்றுரைக்கப்
போந்த அவர்முன் பொருவணிகன்—நேர்ந்துநல்ல
குங்குலிய மிட்டு நிறைத்தபொதி கொண்டுவர
அங்கதுகண் டன்னா ரகமகிழ்ந்து—கங்கைதிகழ்
சங்கரனார் பூசை தனக்கான குங்குலியம்
இங்குயான் பெற்றே னிதனினும்பே—றெங்குமுண்டோ
என்று வியந்து எழிற்றா லியைக்கொடுத்து
அன்றப் பொதிவாங்கி யாண்டகன்று—சென்றடியார்

சீக்கிரத்தி லந்தச் சினகரம்புக் கங்கிருக்கும்
மேக்குயர்பண் டார மிகநிறைத்து—யாக்கையயர்
வில்லாம லீச னிணையடிபூ சித்திருந்தார்
அல்லார் களனு மதையுணர்ந்து—சொல்லாமல்
அன்பர்மனை தன்னி லளகேசன் செல்வமெனப்
பொன்றிரளு நெல்லும் பொருவில்பல—நின்றொளிரும்
தக்க நவநிதியுஞ் சால நிறைத்துவைத்து
மக்கள்பசி யால்வருந்த வாடியே—துக்கமுடன்
கண்டுயிலும் பாரி கனவினிடை கூறுதலும்
ஒண்டொடியா ளத்தை யுணர்ந்தெழுந்து—கண்டவற்றை
யீதெலா மீச னருளெனவே யெண்ணியவர்
போதக் கரங்குவித்துப் போற்றியே—காதலர்க்கு
சாதங் கறிகள் சமைத்திட்டார் பின்னர்பரை
நாதர் கலயர்தனை நண்ணியே—தீதணுகாப்
பத்தனே தீரப் பசித்தாய் மனைக்கேகி
உத்தமமார் பாலடிசி லுண்டுனது—சித்தமுறும்
இன்னலெலா நீக்கிடுவா யென்றா ரதுகேட்டு
துன்னு மடியர் தொழுதிறைஞ்சி—அன்னையுமை
கூறர் அருளை மறுக்கவஞ்சிக் கோயில்விட்டு
வீறுநெடு வீதிசென்று வீடடைந்து—மாடுநிறை
செல்வமெலாங் கண்டு திருவனைய தேவியரை
எல்லையிலா விப்பொருளீண் டெய்தியதென்-சொல்லுதியால்
என்று வினவ எமதிறைவன் றன்னருளால்
இன்றடைந்த தென்றே யியம்புதலு—நின்றுதொண்டர்
எந்தையரு ளென்பா விருந்ததெவ னென்றழுது
தந்தலையின் மீதுகரந் தாங்கினார்—சுந்தரஞ்சேர்
பாரியார் தூய பரிகலங்க டான்றிருத்தி
நேருங் கணவனொடு நின்மலனார்—ஒருமன்பர்
தங்களையுங் கூடவைத்துச் சாதங் கறிபடைத்து
பொங்குசுட ரேற்றிப் புசிப்பித்தார்—மங்களமா
யிப்படியே சின்னா ளியற்றிவருங் காலைதனிற்
செப்பு மகிமைத் திருப்பனந்தா—ளப்பாது
நேர்கண்டு சேவைசெய வெண்ணி யொருநிருபன்
ஆர்வம் பெருகிடவே அத்திகளைச்—சீர்பெறவே
தாட்டிகமாய்ப் பூட்டி யிழுத்திடவுஞ் சங்கிலிகள்
மூட்ட றுந்து போக முகப்பசந்து—கூட்டமுடன்
அல்லும் பகலு மகலாக் கவலையெய்திச்
செல்லு மரசன் செயலறிந்து—வல்லியிடப்

பாகனார் தாசன் பாரமனைத்தான் நேர்காண
மோகமுற்றக் கோயின்கண் முன்சென்று—ஒகையுடன்
சேனையொடு யானைகளுஞ் சேர்ந்திழுத்தங் கெய்ததுபோல்
யானு மிளைப்புறுவே னென்றெழுந்து—தேனலருங்
கொன்றையார் மேனி கொழுவுங் கயிறதனை
வன்றிறலாற் றன்கழுத்தின் மாட்டியே—என்பிறவே
மன்னுகள நோவ வலிந்திழுத்தா ரப்பொழுது
தன்னடியார்க் கேவல்செய்யுந் தற்பரனார்—பின்னமின்றி
நேராகி நின்றார் நெடுவிசும்பின் வானவர்கள்
மாரிபோற் புட்பம் வழங்கினார்—தேரிவுளி
உம்பலொடு காலா ளுடைய விறல்வேந்தன்
கம்பிதம தாகிக் கரங்கூப்பி—உம்பர்களும்
போற்றித் துதிக்கு மடிமுடியின் மேற்புனைந்து
எற்றுக் கொடியா ரெழில்பெறவே—தேற்றமுடன்
செந்நிலையை யாங்காணச் செய்திட்ட ரின்றொருவன்
இந்நிலையை யாற்ற வியலுமோ—வெந்நடையா
மன்னன் றுதித்து மறுபணிகள் செய்தபின்னர்
தன்னகருக் கேகத் தவமுடையார்—பொன்னியலு
மன்றினிடை யாடு மலரடிக ளேத்திவைகிப்
பின்றைப் பலநாள் பெயர்ந்திடவே—பொன்றலிலா
நாத ரமருந் திருக்கடவூர் நண்ணியங்கி
ஓதமிலா நற்றொண் டியற்றுநாண்—மாதுமையாள்
ஞானவமு துண்டசிறு நற்களிறு நாவரசும்
மானவர்க ளேத்த வரக்கண்டு மோனமுறும்
பத்தர் மகிழ்ந்து பரிவா யகத்தழைத்து
அத்தகையார் தங்கட் கமுதூட்டி—உத்தமர்த
மாரருளும் பெற்று அடற்கூற்றை யட்டவர்வாழ்
சீரார் திருக்கடவூர் சேர்ந்துபல—நாராரும்
பன்னு சிவகைங் கரியம் பலபுரிந்து
தன்னிகரி லானடிக்கீழ்ச் சார்ந்திட்டார்—அன்னவரின்
பாத மிரண்டுந் தலைக்கணிந்து பண்டைவினை
யோதங் கடப்போ முவந்து.

உலகத்திலுள்ள புத்தகசாலைகளிலெல்லாம் மொத்தம் பதினெட்டு கோடியே பத்து லக்ஷம் புத்தகங்க ளிருக்கின்றன.

சர்வ கலாசாலைப் புத்தகசாலைகளில் அதிகப் பழமையானது ஸ்பெயின் தேசத்தில் சலமான்கா என்னுமிடத்தி லிருக்கிறது. அப் புத்தகசாலை 1254ல் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

உருத்திர சூக்தம்

இருக்குவேதம் மண்டலம், 2. சூக்தம், 33.

II

திரு. த. ராமகிருஷ்ண விச்வகர்மன்.

(வேத மாணக்கன்)

மருத்துவர்களி லுண்மை மருத்துவன்.

அ. உண்மை மருத்துவன் பரமேசுவரனே யாவன். அவனே யாவரையுங் காத்தோம்பி உடல்நல மளிப்பவன். அவ் வாற்றல் மிக்க சோதி வடிவனான இறைவனை அடிபணிதலே தகுதி. அவனைப் போற்றிப் புகழ்ந்து பரவுக. அவன் திருப் பெயர்களைச் சிந்தித்திடுக.

மருத்துவன் கடமை குறைக ளகற்றி நோய் தணித்து அமைதி தருதலாகும். இறைவன் வழிபடுவார்க்கு மெய்யான அமைதி யின்பந் தந்து குறைகள் யாவற்றையும் நீக்குகின்றாகலான் 'இணையற்ற மருத்துவனாவான்.' இச் சூக்தம் இதுகாறும் மருத்துவ இயல் இயம்பியது. இனி ஒருவாறு இறைவ னியல்பு உணர்த்தத் துவங்குகின்றது. இதனைக் கண்டு சிலர் முன்பின் தொடர்பற்ற பொருளில் புகுகின்றதென்று ஐயுறுதல் கூடும். உண்மையாக ஆராயின் இதுவே வைதிக உபதேச முறைமையாகும். முற்கூறியவாறு ஆத்யாத்மிகம் (Individual) தனித்தன்மையிலும், ஆதிபௌதிக (social) குழூஉத்தன்மை அல்லது உயிரியல் நெறியிலும், ஆதிதைவிக (Cosmic) உலகியல் நெறியிலுமாக முறைபட மறைகள் அறிவுறுத்துகின்றன. இம் முறை பற்றி 'உருத்திர' னென்னும் மொழி கீழ்க் கண்டவாறு பொருள் பயக்கும்:—

(1) ஆத்யாத்மிக உருத்திரன்—ஒவ்வொரு சீவர்களிடத்தும் உறையும் பத்து வகைக் காற்றுக்கள். உயிர் அல்லது ஆன்மா. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாது நிலவும் ஆற்றல்.

(2) ஆதிபௌதிக உருத்திரன்—மக்கட்குழாம் அல்லது உயிர்க்குழாங்கள் நிலைபெற்று வாழ்தற்குரிய நெறிகளுணர்த்தித் தக்க தாபனங்கள் காணும் மருத்துவர் முதலியோர்.

(3) ஆதிதைவிக உருத்திரன்—காற்று, உயிர்ப்புக் காற்று, நாற்பத் தொன்பது வகைக் காற்றுக்கள், யாண்டும் நிறைந்த இறைவன்.

தனிப்பட்டதோ ருடம்பிலும், நாட்டகமாகிய யாக்கையிலும், உலகத் தொகுதிகளாகிய தோர் பேருடம்பிலும் மேற் குறித்த மூவகை உருத்திரரும் முறையே உறைகின்றனர். முற் கூறிய சூக்தங்களில் தனித்தன்மை வாய்ந்த உருத்திரனைக் குறித்துப் பேசப்படவில்லை. சமூக உருத்திரன் அல்லது மருத்துவனைக் குறித்து விளக்கமுறப் புலப்படுத்தப்பட்டது. நாட்டகத்துச் சிகிச்சை புரிபவன் (Healer) மருத்துவனுவான். நற்குணங்கள் யாவும் நிரம்பியவன் இறைவனே. மருத்துவர்க்குத் துன்பம் நீக்கும் பண்பு உண்டு. இப் பண்பு நிரம்பியவன் பரமாத்மனே யாவன். இப் பொருட்டான் அணிந்துரை மொழியால் 'மருத்துவர்க்கு மருத்துவன்' என்று பரமேசுவரனைக் குறிக்கப்பட்டது. எனினும், இஃது பொய்யுரை யன்று. தெய்விக மருத்துவன் (Divine healer) அல்லது உயிர்களின் துன்பங்கள் யாவற்றையும் அறவே யொழிப்பவன் நுனித்தாராயின் மெய்ப்பொருளாம் இறைவன் ஒருவனே யாவன். ஆகலான், உறுபிணியும் குறைபாடும் துயரும் இடுக்கணுந் துன்பங்களு மொழிக்கு மியல்பு கூறும் உருத்திர சூக்தத்து முதற்கண் மருத்துவனையும முறையே மருத்துவர்க்கு மருத்துவனும் பரம் பொருளையும் உணர்த்தப்படுதல் பொருத்தமுடையதே யாகும். ஒரு நற்குணத்தின் நிறைந்த தன்மை இறைவனிடத்தே காணப் பெறும். எனவே, இந் நற்குணத்தின் நிறைவுடைமையை மறைகளில் இச் சூக்தத்தால் இறைவனிடத்தேற்றிக் கூறப்படுகின்றது. இதுவே வேதங்களின் மிக்குயர்ந்த தோர் மரபாகும்.

நற்குணங்கள் ஒவ்வொன்றையும் பகுத்துக் காண்டற்கியலா அவற்றின் தொடர்பினை இறைவ னிடத்தில் பொருத்திக் காண்டலே முறையாகும்.

'தத்ர நிரதிசயம் ஸர்வக்ஞதா பீஜம்'
—யோகதர்சனம்.

எல்லா வகையான அறிவின் மூலமும் இறைவனிடத்து நிலைத்திருக்கின்றது. மெய்புணர்வாதி நன்னீர்மைகள் யாவற்றிற்கும் உறைவிடமாய் இறைவன் இலங்குகின்றானென்ற பதஞ்சலி முனிவரின் மொழிகளால் உணர்க. இந் தத்துவக் குறிப்பினை யுணர்த்துவதே மறைகளின் சிறந்த நோக்கம். எனவே, அக்நி உருத்திரன் ஆதித்தன் முதலிய தேவதைகளின் சூக்தங்களால், அவற்றின் தனியியல்பும் குழுவியல்பும் உலகவியல்புமாகிய பொருள் நுட்பங்கள் மறைகளால் இயம்பப்படுகின்றன. தனிநிலையில் யாம் காண்கின்ற சிறந்த பண்புக்க ளொவ்வொன்றும், இறைவனிடத்து எங்ஙனம் காண்டல் வேண்டுமென்பதும், அவற்றின் தொடர்பு எத்தகையனவென்பதும் பிறவும் இத்தகைய அணிந்துரைகளால் மறைகளில் செவ்வனே அறிவுறுத்தப்படுகின்றன.

உருத்திரனது பண்பு 'பிணியுந் துயரு மகற்றல்'. இப்பண்பு மருத்துவனிடத்துச் சிறிதளவும் இறைவனிடத்து நிறைவுடையதாகவும் இலங்குகின்றது. இவ்வகையால் காண்பதே இவ்வருணனைக்கு ஏற்புடையதாகும். ஒவ்வொரு பண்புக்களையும் நலனுறப் புனைந்து வழிபடுவார்க் கின்றியமையாதனவாக இறைவன் மேலேற்றிக் கூறுவது மறைகளைத் தவிரப் பிற எப் பனுவல்களினும் சிறப்புறக் காண்ட லரிது. இதுவே மறைகளின் உயர்வு. பரமேசுவரன் ஒருவனே உயர் நலன்கள் யாவுஞ் செறிந்த கருவூலமாகப் பிறங்குகின்றானென்று வேதங்களில் ஆங்காங்கு விசிதமாகக் காணப்பெறும். உலகினைக் கண்டு அல்லது பிறிதெப் பொருளையேனும் நுனித்தாராய்ந்து விரிவுற விளக்கி இறைவனது உண்மை நலனை—மெய்யியல்பை உளத்திடைப் பதியச் செய்தல் வைதிக நெறியின் சிறந்ததோ ரிலக்கணமாகும். இப்பொருட்டானே ஒவ்வொரு தேவதைக (சிறந்த பொருட்க)ளையும் புகழ்ந்துரைக்கும் பகுதிகளில் அப்பொருட்களொடு இறைவனையும் ஒன்றுபடக் கலந் துரைத்தல் சிந்திக்கற்பாலனவாம். இந்நெறிபட ஆராய்தலானே இறைவனது குணவழகையும் குறித்துச் செல்லுதல் வைதிகப் பொருண்முறை மரபாகும்.

இவ் வெட்டாம் செய்யுளில், 'காப்பாளனும் போற்றலுடையானும் ஒளிவடிவனுமாகிய இறைவனைப் புகழ்ந்து துதித்திடுக. அவனைப் போற்றுதலும் அவன் பெயர் பாடுதலும் சிறப்புடையன' என்று மொழியப்படுகின்றது. எனவே, இறைவனைத் துதித்தலும் வணங்குதலும் திருநாமங்களைச் சிந்தித்தலும்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210379

இன்றியமையாதனவாம். இங்ஙனம் பிறரெவரும் வழிபடற்குரியரன்று.

இச் செய்யுட்கு முற்கூறப்பட்ட செய்யுட்களில் பலவிடத்து இறைவன தியல்பினைச் சிறப்பாகவும் மறைவாகவும் குறித்துச் செல்லப்படுகின்றன. அவற்றுள் மருத்துவ வியல்புத் தெளிவுபட விளக்கப்படுதலான் அவற்றையே ஆண்டு மிக்குணர்த்தப் பட்டன. இறைவன தியல்பும் புனைந்துரையாக ஆண்டுத் தக்க விடத்துக் கொள்ளத்தகும். அவற்றை அறிஞர் ஆய்ந்து தெளிந்திடுக.

8. Forth for the brown and whitish bull I utter
A mighty panegyric of the mighty
I will adore the radiant god with homage
We praise the terrifying name of Rudra

இறைவனது ஆற்றலன்றி யாதுமில்லை.

9. உலகனைத்திற்கும் நலன் பயக்கு மிறைவன் பேராற்றலுடையனாக யாண்டும் பரந்து சோதிவடிவனாய் யாவற்றையும் வளர்க்கின்றான். அவனதாற்றல்கள் யாவும் அவனிடமே யாண்டும் பிறங்குகின்றன. எஞ்ஞான்றும் அவனை விட்டகல்வதில்லை.

10. இறைவன் பேரொளிப் பிழம்பாய்ப் போற்றற்குரியனாக யாண்டு முறைந்து பேராற்றல் வாய்ந்தவனாக இலங்குவதால், எவ்வகையினுஞ் சான்றோனாகத் தீயாரை யடக்கு மாற்றலும், அவ்வவர் தகுதிக்கேற்ப அருள் சுரக்குந் திறனும் படைத்திருக்கின்றான்.

இறைவன் யாண்டு முறைகின்றான்: அவனது கை கால்களாதி உறுப்புக்கள் எங்கணும் நிலவிநின்று முழுவாற்றலும் பயக்கின்றன. அவன் வீரனாக விளங்கி யாவரையும் முறையாக அரசாளுகின்றான். அவன் தன்னொளியால் பேரொளிப் பிழம்பாய்ப் பிறங்குகின்றான். ஞாயிறும் மதியும் பிறவும் அவனொளியினின்றே ஒளி பெற்று மிளிர்கின்றன. இப் பரந்த உலகிற்கு அவனொருவனே உண்மையான தலைவன். அவனதாற்றல் எஞ்ஞான்றும் ஒரே தன்மைத்தாக அவனிடமே நிலவுகின்றது. அவனை விட ஆற்றல் மிக்கார் எவரு மின்று. அவனதாற்றலை வேறு பிரித்தற் கெவரானு மியலா.

இறைவன் பேராண்மைப் பெருந்திருவுடைய னாதலான் தீயாரை யடக்கியும், யாண்டும் நிறைந்து நின்று யாவர்க்குந் தண்ணளி சுரந்தும், தம்மின் ஆண்மை மிக்கார் எவருமின்றெனத் துலங்குகின்றான்.

இவ்விரு செய்யுட்களிலும் 'புரு ரூப—விச்வ ரூப' என்னுஞ் சொற்கள் ஐயுறற்பாலனவாக 'ஸர்வ ரூப' என்னும் பொருள் பயக்கத்தக்கனவாய்க் கிடக்கின்றன. 'புருஷு பஹுஷு ரூப்யதே' விச்வஸ்மின் ஸர்வஸ்மின் ஜகதி ரூப்யதே' இறைவன் எப்பொருளிலும் தோற்றப்பட்டு யாண்டும் நிறைந்து யாவரானும் காணத்தக்கவனாக மிளிர்கின்றானென்பதாம். இறைவன் யாண்டும் பரந்து நிலவுகின்றானே யன்றி, உருவும் வடிவும் இல்லாதவனாகையால் எப்பொருட்களின் வடிவினையும் (All forms) ஏற்கின்றானென்று கொள்ளுதல் பொருந்துவதன்று. உருவின்றி வடிவின்றி உலகம் யாங்கணும் செறிந்து மிளிர்ந்து தோற்றுதலான் 'புருரூப, விச்வ ரூப' என்று இறைவனை உணர்த்துவதாயிற்று.

9 He mighty, brown-hued, multiform, has decked out
His stalwart limbs with jewels bright and golden,
From Rudra, this great universe's ruler,
Let not be severed his divine dominion.

10 Worthy, thou carriest thy bow and arrows,
Worthy, thine honoured and all-hued neck'ace
Worthy, thou wieldest all this mighty power
Naught that exists is mightier than thou art.

தயையுள்ள மந்திரி

(ஸ்ரீ. K. சங்கரநாராயணன் எழுதுவது.)

விக்டோரியா சக்கிரவர்த்தினியை மணம்பேச ஆல்பர்ட் இளவரசர் இங்கிலாந்திற்கு வந்திருந்தார். அவரைக் காண நகர மாந்தரனைவரும் ஆவலுற்றனர். மஹாராணி வசித்து வந்த 'வின்ட்ஸர்' அரண்மனையில் ஜனத்திரள் வந்து குவிந்தது. அரண்மனை மாடியில் ராஜ தம்பதிகள் கைகோர்த்து அங்குமிங்கும் உலாவும் கோலத்தை எல்லாரும் கண்டு களித்தனர். எவ்விதத்திலாவது அரச தம்பதிகளைக் காணக் கருதி, நகர வாசனையே யறியாத குடியானவன் ஒருவன், பிரபுக்கள் சாதாரணமாய் உட்புகும் பாதையின் வாயிலில் வந்து நின்றான். அத் தருணம்அப்பாதையை, சாதாரணமாய் அலங்கரித்துக்கொண்டிருந்த யௌவன புருடனொருவன் தாண்டிக்கொண்டிருப்பதை அக் குடியானவன் கண்டான். அரண்மனையையாவது,—லண்டன் நகரைப்போலுள்ள பெரிய நகரையாவது—இதற்குமுன் னறியாத அந் நாட்டுப்புறத்தான், அவனை ஒரு வேலையாளென மதித்தான். "ஐயா வேலையாளே! அரசியைக் காண வேண்டுமென்கிற எண்ணத்தினால் வெகு தூரத்திலிருந்து வருகின்றேன். ஜனக் கும்பல் வருமுன் என்னை உள்ளே விடமாட்டாயா? ஜான் தாமஸ்!—உன் பெயர் எதுவாயினும் சரி, தயவு செய்து உள்ளே விடு" என்று அந் நாட்டுப்புறத்தான் கூவினான்.

இதைக் கேட்டதும் அப்பணியாள் சற்றுத் திகைத்தான். "சோதர! நீ கூறியபடி நான் செய்வேனாகில் எனது வேலை போய்விடும். இது மகாராணியின் கண்டிப்பான உத்தரவு" என்றான் அரண்மனைக் காவலன்.

நாட்டுப்புறத்தான்.—சீ முட்டாள்! இம்மாதிரி செய்வதற்காக மகாராணி உன்னை தண்டித்துவிடமாட்டாள். இது ஒரு குற்றமாகாது. வந்து கதவைத்திற. உனக்குக் கோடி புண்ணியமுண்டு.

பணியாள்:—நீ இவ்வளவு பணிவாய்க் கெஞ்சுவதால் அவ்வாறே ஆகுக.

கதவு திறக்கப்பட்டது. நாட்டுப்புறத்தான் உட்புகுந்தான். அரண்மனையின் உட்புறத்தை யடைந்ததும், நாட்டுப்புறத்தான் ஒரு வெள்ளி நாணயத்தை யெடுத்துப் பணியாளிடம் கொடுக்கப் போன தருணம், அப்பணியாள் மிகுந்த வந்தனத்துடன் அதை பெற்றுக்கொண்டான்.

விக்டோரியா மகாராணியும் ஆல்பர்ட் மன்னவரும் தோன்றியபொழுது அக்குடியானவன் ராஜதம்பதிகளை கண்டானந்தித்து, தன்னை உள்ளேவிட்ட பணியாளுக்கு வந்தனம் செலுத்தினான். ஆனால் அவன் ஆச்சரியப்படும்படியாய் ஒரு சம்பவத்தைக் கண்டான். அதாவது தன்னை உள்ளே விட்ட பணியாள் ராஜ தம்பதிகளின் கூட சிநேக பான்மையாய் பேசிக்கொண்டு வந்தான்.

என்ன ஆச்சரியம்! ஒரு பணியாள்! மகாராணியுடன் சிரித்து சம்பாஷிப்பது! இவ்வதிசயத்தைக்கண்ட அம் மனிதன் தன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மற்றவனொருவனை நோக்கி, "ஐயா! அதென்ன வேடிக்கையா யிருக்கிறது. என்னை உள்ளே விட்ட அப் பணியாள் மகாராணியுடன் சிரித்துக்கொண்டு வருகின்றானே! இதுவென்ன புதுமை!" என்றான். "எந்த பணியாள்" என்று வினவினான் அம்மனிதன். "அதோ நிற்கின்றானே நீல அங்கியையும் சிவந்தக் கழுத்துப்பட்டையையும் அணிந்துகொண்டு, அவன் தான்" என்று பதில்மொழிந்தான் நாட்டுப்புறத்தான்.

அதைக் கேட்டதும் அம்மனிதன் கலகலவென நகைத்து, "ஆமாம். நீ காட்டுகின்ற மனிதனை நன்றாயறிந்தேன். அவன் அணிந்துகொண்டிருக்கும் ஆடைகள் விண்ட்ஸர் அரண்மனையாடைகளே! உனது நண்பனான வேலையாள் யாரென்றால், இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகிய லார்டு மேல்போர்ன் என்பவரே என்று அம்மனிதன் விடை பகர்ந்தான்.

ஆச்சரியத்துடன் குடியானவன் தன் ஊருக்குச் சென்றான். மறுநாட் காலையில் ஒரு சேவகன் வந்து, தான் முந்திய தினம் பணியாளிடம் கொடுத்த நாணயத்தின்கூட ஐந்நூறு பவுனையும் மந்திரி கொடுக்கச் சொன்னதாகக் கொடுத்துச் சென்றான்.

வ.வெ.சு. ஐயர் விக்கிரமசிங் ஆனது

விநாயக தாமோதர சவர்க்காரை லண்டனிலுள்ள ஓர் சிறையில் வைத்திருந்தபோது அவரை நமது ஐயர் சந்திக்க விரும்பினர். ஒரு பஞ்சாப் தேசத்து வீரனைப்போல் உடை தரித்துக்கொண்டு சிறைச்சாலை நிர்வாகஸ்தனிடம் உத்தரவு பெற்று சவர்க்கார் முன்னிலையில் தோன்றினர். சவர்க்காருக்கு நமது ஐயரவர்களை அடையாளமே தெரியவில்லை. ஐயர் அவ்வளவு சாமர்த்தியமாக அசல் பஞ்சாபியே போன்று உடைதரித்திருந்தார். 2, 3 நிமிஷங்களுக்குப் பின் ஐயரவர்களைத் தெரிந்துகொண்டு "நீ ஏன் இன்னும் இந்த தேசத்தி லிருக்கின்றாய்?" என்று கேட்டார். சவர்க்காருடன் சேர்ந்து சதியாலோசனை செய்ததாக ஐயரவர்களையும் கைது செய்ய அதிகாரிகள் வேலை செய்து வருவது சவர்க்காருக்குத் தெரிந்துவிட்டது. ஐயா! உங்களுக்கும் இன்று வாரண்டு வந்துவிடும், கைது செய்துவிடுவார்கள். ஆதலால் அதற்குள் தப்பி வேறு வேறு நாடுகள் சென்று பாக்கி வேலைகளைச் செய்துகொண்டிருங்கள் என்றார். நீங்கள் சிறைக்குள் இருக்கும் போது நான் மட்டும் தப்பித்துக்கொண்டு போவதா? நானும் உங்களுடன் வசிக்கவே இஷ்டப்படுகிறேன் என்று ஐயர் கூறினார். அதற்கு சவர்க்கார் கூறியதாவது:—

" இவ்வித முரட்டுத்தனம் வேண்டாம். எல்லோரும் சிறையுள் கிடப்பதால் பலன் என்ன? விரைவில் தப்பித்து விடும். 24-மணி நேரத்திற்குள் இங்கிலாந்தின எல்லையை விட்டுத் தாண்டிவிடும். உம்மால் முடிந்ததையேனும் நாட்டிற்குச் செய்துகொண்டிரும்" என்றார். இருவரும் பிரிந்தனர். ஐயர் தமது விடுதிக்குச் சென்றார். எல்லாப் பொருள்களையும் போக்கிவிட்டுத் தனக்கு அத்யாவசியமாக வேண்டிய உடைகளை மாத்திரம் ஒரு பெட்டியில் எடுத்துக்கொண்டார்; அன்று பொழுது புறப்பட 1-மணி நேரம் பாக்கியிருக்கிறது. பெட்டியைத் தூக்கிக்கொண்டு பிரான்சிற்குச் செல்லும் கப்பலில் ஏறுவதற்காக ரயிலடிக்குச் சென்றார். ரயில் போய்விட்டது! அப்புறம் பையப் பைய நடந்து சென்று கடற்கரை அடைந்தார். ஐயரவர்கள் " கலே" மார்க்கமாக பிரான்ஸ் தேசம் போவதற்கு, கப்பலும் ஏறி விட்டார்; லண்டன் வேவுகாரர்கள் பொழுது புலர்ந்ததோ இல்லையோ ஐயரவர்களைக் கைது செய்ய ஹோட்டலுக்கு வந்து பார்த்தனர். ஐயர் போய்விட்டார் என்று ஹோட்டல் தலைவி

சொல்லிவிட்டாள். எல்லா ரெயில்வே ஸ்டேஷன்களுக்கும் கப்பல் துறைமுகங்களுக்கும் "தென்தேசத்து இந்தியனாகிய வி. வி. எஸ் ஐயரைக் கைது செய்யுங்கள்" என்ற தந்திச் செய்திகள் பறந்தன. ஐயர் பிரயாணம் செய்யும் கப்பலிலும் பிரிட்டிஷ் வேவு காரர்கள் இருந்தனர். அவர்களுக்கும் தந்திச் செய்தி கிடைத்தது. ஒற்றர்கள் ஐயரைத் தேடிப் பார்த்தனர். ஐயரைக் காணவில்லை. ஆனால் ஒரு பஞ்சாப் தேசத்து சீக்கியர் காணப்பட்டார். அந்த சீக்கியருடைய பெட்டியில் "வி. வி. எஸ்." என்ற விலாசம் காணப்பட்டது. ஆதலால் இவரே வி. வி. எஸ். ஐயராக இருப்பாரோ என்ற சந்தேகம் அந்த ஒற்றர்களுக்கு உண்டாயிற்று. ஆயினும் அப்படி யில்லாது போய்விட்டால் தப்பிதமல்லவா என்ற பயத்தால் கைது செய்யத் துணியவில்லை எனினும் இவர் யாரென அறிவதற்கு பலத்த சூழ்ச்சி ஒன்றை ஆரம்பித்தனர். ஐய ரவர்கள் உருமாறி நடப்பதில் எவ்வளவு சமர்த்தரோ அவ்வளவு பிரிட்டிஷ் ஒற்றர்களின் சாமர்த்தியச் செயல்களைக் கண்டறிவதிலும் சமர்த்தர். கப்பலில் ஒற்றர்கள் என்ன செய்தார்கள்? ஒரு தந்திக் கவரை நன்றாய் ஒட்டி அதன் மேல் வி. வி. எஸ். ஐயர் என்று ஆங்கிலத்தில் எழுதி ஒரு தபால் காரனைப்போல் வேடந் தரித்து அந்தக் கவரை நமது பஞ்சாபியிடம் கொண்டு வந்து கொடுத்தான் ஒரு ஒற்றன். பஞ்சாபி வாங்கினார். தந்திக் கவரை பார்த்துவிட்டு "ஒ இது எனக்கல்ல, இது வி. வி. எஸ். ஐயருக்குரியது" என்று கவரைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். ஒற்றன் அதோடு போய்விடக் கூடியவனா? இன்னும் பலித்த மட்டிலும் பார்க்கலாமென்று "மன்னியுங்கள் ஸார்! உங்களுடைய பெட்டியில் வி. வி. எஸ். என்று போடப்பட்டிருப்பதால் நீங்கள்தான் ஐயரோ" என்று நினைத்தேன் என்றான்; ஐயர் சற்று பிரமித்தார். எனினும் உடனே "என்னுடைய பெயர் வி. விக்கிரம சிங்" என்றார். ஐயர் அவசரத்தில் அந்தப் பெட்டியில் வி வி. எஸ். என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததை அதுவரை கவனிக்கவே இல்லை; எனினும் உளவாளி சந்தேகப்படாவண்ணம் பதிலளித்ததானது நமது ஐயரவர்களின் சாமர்த்தியத்தையே காட்டுகிறது. சரிதான் இவர் ஐயரல்ல என்ற சந்தேகத்தால் ஒற்றன் போய்விட்டான்; ஐயரும் சுகமே " ஆம்ஸ்டர்டாம்" என்ற பட்டணத்தை அடைந்தார்

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2	0	0
தென்னாபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ. 40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ. 50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)	ரூ. 8	0	0
அரைப்பக்கம் ஷை	ரூ. 4	0	0
கால்பக்கம் ஷை	ரூ. 2	8	0

சிறந்த வாசனை

ஊது வத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி	சேர் 1-க்கு	6—0—0
அம்பர் வத்தி	,, 1-க்கு	5—0—0
கிலீட் வத்தி	,, 1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி	,, 1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,
EXPORT DEPARTMENT,
Post Box No. 99, **MADRAS.**

குழந்தைகளை : : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0
,, 2 ,, ,, ,, ,, 3—8—0
,, 3 ,, ,, ,, ,, 2—0—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, : :. சென்னை.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

ஷண்முகம்

பட்டணம்பொடி

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அகல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.		விலை.	தபால்சிலவு.	பாக்கிங்.	மொத்தம்.
8	ரூ.	1 0 0	0 5 0	0 1 0	1 6 0
20	,,	1 12 0	0 8 0	0 2 0	2 6 0

<u>டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.</u> இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்

ஆமுனியோஸர்

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாமத வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு $\times 2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah &Co.,

Post Box 99, MADRAS.

A.

S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் சண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 டை டஜன் 1-க்கு ரூ. 2-4 டை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 டை டஜன் 1-க்கு ரூ. 2 டை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதறாஸ்.

கையிலிருந்தாலும் அழகு !

பன்னிரு இதழ்களையும் ஒன்ருய்ச் சேர்த்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னை.

தென்னிந்தியாவில் நிகரற்ற,

ஆதிபரிமளச்சாலை.

(1800-ம்-ஸு ஸ்தாபிக்கப்பட்டது)

இது இராஜக்கள், ஜமீன்தார்கள். கோடீஸ்வரர்கள் ஜனத்தலைவர்கள் டாக்டர்கள், வியாபாரிகள் முதலியோரால் ஆதரிக்கப்பட்டது.

K. தாவுத் ஸாஹிப்.

இவர், அனேக கண்காக்ஷிகளில் தங்கம், வெள்ளி மெடல்கள் பரிசளிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும், சென்னை எச். ஈ. தி. கவர்னரவர்களின் நன்கு மதிப்பும், அனேக கனவான்களின் நற்சாக்ஷி சோதனை பத்திரங்களும் பெற்று மான் மார்க்கு அடையாளமுடன் அடியிற்கண்டுள்ள சகல வாஸனை திரவியங்களால் நற்கியாதியும் பெற்றவர்.

வாஸனை சாமான்களின் விபரம்: உலகப்பிரசித்திபெற்ற,

ஆதி சந்தனாதித் தைலம்.

இது மூளைக்காதாரமானது. ஜெகத்தோர் மெச்சும்;

அரைக்கீரைவிதைத் தைலம்.

இது பித்தோஷ்ண நிவாரணி.

இவையன்றி, மேலானவாசனை யுள்ளவைகளாவன:—ஜவ்வாது, புனுகு, அறகஜா, அம்பர், பலவித வில்லை தினுசுகள், தூரதேச அத்தர் வகைகள், ஸ்தூரி, அம்பர், ஜவ்வாது பன்னீர், புனுகு அகர் முதலிய பத்தி தினுசுகள், மேல்நாடுகளின் ஸெண்ட் தினுசுகள், கூந்தல் வளர் தைலங்கள், பன்னீர் வகைகளும், சந்தன வில்லை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை. அற்புத பற்பொடி, சந்தனப் பவுடர், கேஸரி பவுடர், தஸாங்கம், விலைக்கேற்ற கலப்பு சந்தனம், குல்கந்து பருவு நிவாரணி, வாசனைப் பாக்கு. சுண்ணாம்பு, கொப்பரைச் சீவல், ஸ்நானப் பவுடர், தங்கம் வெள்ளி ரேக்க மைந்த ஏலங் கிராம்பு வகையரு, சுருள் நைஸ் கொட்டைப் பாக்கு சீவல், மதுரைப்பிள்ளை ஊறுகாய் முதலியவைகள் மான் மார்க்கு அடையாளமுடன் எங்களிடம் கிடைக்கும்.

விபரமான காட்லாக் தேவையானால் கிடைக்கும், பல இடங்களில் தகுந்த ஏஜண்டுகள் தேவை. ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பாருங்கள்,

K. தாவுத் ஸாஹிப் அண்டு ஸன்ஸ்

தந்தி விலாசம்:—"ஸெண்ட்மால்."

திரிபமளுளச் சாலை, 311, பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

மனோஹரி.

அழகியதோர் கதை. இதில் விக்கிரமகேதுவின் தீச்செயலால் “கெடுவான் கேடு நினைப்பான்” என்பதையும், மனோஹரி என்னும் பெண் தன் தகப்பனுர் கிழட்டு அரசனுக்கு மணம் செய்து விக்கப் போனுர் என்பதைக் கேள்விப்பட்டு தனது நந்தவனத்தின் பக்கம் வந்த குணசீலன் என்ற வேறொரு நாட்டு இளவரசனுடன் ஆண் வேடம் பூண்டு இரவு 12 மணிக்கு பின் பற்றிச் செல்வதும் நந்தவனத்தில் வைத்து காதலர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணைகளின் பேரில் இருவரும் காதலித்துக் கொண்டவைகளையும் படிக்கப்படிக்க மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

விலை அணு 0—8—0.

மணிவடக்களவு

பட்டப்பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தினமாலையை திருடி மறைந்த ஒரு சுந்தரமாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.

விலை அணு 0—4—0.

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்டரி



யூனிவெர்ஸல் பாட்டரி

பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவேர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள்:—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

மோட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை.

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுச்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப்பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

ங்களில்

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்க ங்கள்,

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, Post Box 287, Madras.

தமிழ்நாடு
210379

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு ஜரிகையினால் "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முக தலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும் ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேகமில்லை!

No. 1.	16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ. 38—0...0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ. 44—0—0
No. 2.	16 மு x 44 இஞ்சி	,,	1	ரூ. 30—0—0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ. 36—0—0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருதுவாகவும், பள்பளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷைக் கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ.	52—0—0
18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	60—0—0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

S. MUTHIAH & CO.,

பாட்ரி

EXPORT DEPARTMENT

Post. Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade. *Phone: No. 2693.*

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும் பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்ளூ முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room : 287, Esplanade. *Phone : No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.